to-day is made to carry a load of books much heavier than its own weight! Sir, it is the responsibility of this House to find out who is responsible for the fall in standards and try to rectify matters.

"We have now accepted basic education as our goal. I do hope that within the period of ten years it would be possible for this State to lead in the matter of basic education. The steps taken by our Government in this connexion deserve our commendation.

"Coming then to the question of aided schools, I must bring to the notice of the Government a tendency on the part of private managements to think of education as a business proposition. I know schools are sold by one management to another and money is paid by the purchaser. Then, Sir, the deductions in the teachers' salaries continue to be made in spite of the best vigilance of the Education Department. It is not found possible to exercise any check over this malpractice on the part of some of the managements and I hope that the Elementary Education Committee will go into this question also.

"Sir, so far as municipalities are concerned, a big slice of their income is being utilized for elementary education. They do not get the same facilities from the Government as others. To cite an instance, the Udipi Municipality is spending Rs. 40,000 out of a total income of one lakh of rupees on this account. If the State Government take over this responsibility or just find funds for running these institutions, it would have enabled the municipalities to provide other amenities to the people which to-day they are not able to do for want of funds. I do hope that the Hon. the Minister will look into this question also.

"I congratulate the Government on having decided that free education will be provided up to the III form to poor children. There are a very large number of children in the State who will take advantage of this concession and I also hope that this step of the Government will bring about rationalization of studies in the existing schools and strengthen the high schools.

"In this connexion, I would invite the Government to examine the problem arising out of schools being concentrated in particular areas. There are Labour schools; there are local board schools; there are schools run by the Fisheries Department. All these are run within a radius of three or five miles. I do not think such concentration of schools in one area serves any useful purpose. I hope that this also will be looked into.

"Then, there are the single-teacher schools. Some hon. Members who preceded me pointed out that when a man did not get any other job, he chose to become a teacher. Well, that may be an unfortunate economic fact. But at the same time, it is strange that the Government also look at the question in the same way. Whenever the problem of unemployment assumes large proportions, at once the only solution that comes to the mind of the Minister is starting of more schools so that the unemployed men may be employed as teachers. So, education is also thought of

12th March 1955] [Sri T. Ananta Pai]

only as a means of providing jobs for the unemployed and not as an important problem by itself. A basic change in the approach of the Government to the problem is called for. Teachers are not made but are born. It is not possible to get good teachers under the present system. I do hope that even primary school teachers will hereafter be selected on the basis of results at a competitive examination held for the purpose. They alone can handle the children better. If this method of recruitment is not adopted, then any amount of coaching and training—whether it is one year or two years—will not produce good teachers.

" Next, Sir, I come to the question of night schools. In different parts of our country, the Governments have been encouraging schools to be started for people who work during day time, and who can attend schools only during spare time and get the benefits of education. I do not understand why our Government should stand in the way of those who are employed in getting the benefits of education. The Bombay Government have made very great progress in this field and I hope our State will provide facilities for such men to equip themselves educationally.

" Lastly, Sir, I come to the question of autonomy of universities. I do feel that there should be a certain amount of control over the University so long as the Government give grants to it. The Government need not interefere with the working of the University in academic matters—such as what is to be taught and so on. But regarding the rules of affiliation, from the point of view of spread of education, I think it should be the responsibility of the State to tell the University that education must be made available to everyone who seeks it and must be democratised. I do hope that the University Act will be so amended as to enable the Government to have some control over the University in such matters, which control they have so unwisely given up.

" While on this subject, Sir, I am reminded about the medium of instruction in the colleges. I do welcome the announcement made by the Hon. the Minister for Education that the medium of instruction in colleges should be the regional language. He mentioned Tamil as the regional language here. I welcome it. As Madras is a multilingual State, subjects can be taught in Kannada and Malayalam also in colleges under the Madras University. Should there be any difficulty about it, there are statutory universities brought into existence and the Union Government are giving them all grants. All colleges in Malabar could be affiliated to the Kerala University and all colleges in South Kanara to the Karnatak University."

* **Sri A. SAMBASIVAM** :—" மதிப்பிற்குறிய துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்விப் பிரிவின் செலவு தொகையை ஒப்புக்கொண்டு மொழி வளர்ச்சியிலும் கல்வி வளர்ச்சியிலும் மிகுந்த ஊக்கம் காட்டி வரும் நமது கல்வி அமைச்சருக்கு என்னுடைய பாராட்டுதலை தெரிவித்துக்கொண்டு இந்த திட்டத்தைப் பற்றி சிறிது பேச ஆசைப்படுகிறேன். 11-30 a.m.

" பொதுவாக நமது சுதந்தர அரசாங்கம் ஏற்பட்ட பிறகு முன்பு இருந்ததைக் காட்டிலும் கல்வித் துறையில் நமது கல்வி அமைச்சர் அதிக ஊக்கம் காட்டிவருகிறார். கல்வித் துறையில் அதிகம் செலவழிக்கவும்

ஊக்கம்காட்டி வருகிறூர். முன்னேவிட இரண்டு பங்கு அதிகப்படியாக தொகை ஒதுக்கி இருக்கிறூர். ஆந்திரப் பிரிவினைக்கு முன் 12 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டு வந்தது. ஆந்தரப் பிரிவினைக்குப் பிறகும் இந்த வருஷம் 10½ கோடி ரூபாய் அளவிற்கு ஒதுக்கி இருப்பதைக் கண்டு பொது மக்களும் கல்வித் துறையில் ஆர்வம் உள்ளவர்களும் மற்றவர்களும் பாராட்டக் கூடிய செய்தியாகும். நீண்ட காலமாக நமது நாட்டின் கல்வி முறையா னது பிற்பட்ட முறையில் இருந்து சீக்கிரத்தில் திருத்தமும் வளர்ச்சியும் பெறுமல் இருந்து வருகிறது. அதற்கு முயற்சி எடுத்துக்கொண்டதெல் லாம் காய்ச்சிய இரும்பில் தண்ணீரைக்கொட்டியதுபோல் பயனடையாமல் போகிறது. உடனடியாக பயனடையக் கூடியதாக இல்லை. கல்வி வளர்ச்சி யிலும் மொழி வளர்ச்சியிலும் நமது அமைச்சர் காட்டுகிற ஊக்கத்தையும் ஆர்வத்தையும் ஆசிரியர்கள் நிலையை வளர்ப்பதிலும் காட்டப்படவேண்டும் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக்கொள்ளுகிறேன்.

"சமுதாய வளர்ச்சிக்கு எப்படி உணவு இன்றியமையாததாக இருக் கிறதோ அதைப்போலவே சமுதாய மேன்மைக்கு கல்வி இன்றியமையாத தாக இருக்கிறது. ஆகவே அரசாங்கம் இந்நாட்டில் இரண்டு கண்களைப் போல் பாவிக்கவேண்டியது இரண்டு செயல்கள் இருக்கின்றன. அதில் உழவு ஒன்று, மற்றென்று கல்வி. உழவர் சமுதாயத்தின் தாய்போன்றவர். ஆசிரியர்கள் தகப்பனை போன்றவர்கள். அந்தக் கல்வியை வளர்ப்பதற்கான ஆசிரியர்கள் அந்த அளவில் மேம்படவேண்டும். இன்றையதினம் ஆசிரி யர்களுடைய தொழில் கவர்ச்சிகரமாக இருக்கிறதா என்று பார்க்கவேண் டும். ஆசிரியர்கள் இந்தத் தொழிலை விரும்பிவருவதாகத் தெரியவில்லை. வேறு துறைகளில் அவர்களுக்கு தொழில் கிடைக்காத காரணமாக இந்த ஆசிரியத் தொழிலிலாவது தங்களுடைய ஊதியத்தை பெறலாம் என் பதற்காகத்தான் ஆசிரியர்களாக வருகிறூர்கள். ஏதோ வயிற்றுப் பிழைப் பிற்காக அந்தத் தொழிலுக்கு அவர்கள் வருகிறூர்கள். இந்த பண்பாடு டன் அவர்கள் வருவதால் அவர்களிடமிருந்து எந்த விதமான நன்மையை யும் மாணவர்கள் அடைய முடியாதபடி இருக்கிறது. வருங்கால சமூகத் தினர் முன்னேற்றமடையக்கூடிய நிலைமையில் அவர்கள் இல்லை. அதனுல் வருங்கால சமுதாயம் பெரும் நன்மையை அடையவேண்டுமானுல் அவர் களை யாரிடம் ஒப்படைக்கிறேமோ அவர்கள் அந்தத் தொழிலைத் தெரிந்த வர்களாகவும், ஊக்கம் உள்ளவர்களாகவும், மேம்பாடுள்ளவர்களாகவும், பொருப்பும் தகுதியுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். அப்படி நியமிக் கும்போது அவர்களுக்குவேண்டிய சலுகைகள் கொடுத்து கல்வியை நல்ல முறையில் அமைத்து நல்லவர்கள் ஆசிரியர்களாக வருவதற்கு கவர்ச்சி கரமாக அமைக்கவேண்டும்.

"அதே சமயத்தில் பொருளாதாரத்தைப் பற்றி சொல்ல முற்பட்டால் அதற்கு சர்க்கார் திரும்பத் திரும்ப ஒரே பதிலைத்தான் சொல்லவேண்டி யிருக்கும். அப்படி பதில் சொல்லக்கூடிய நிலைமையில் நான் ஒன்றும் சொல்லிக்கொள்ள விரும்பவில்லை.

"கட்டாய இன்ஷூரென்ஸ் திட்டம், பிராவிடெண்ட் பண்ட் திட்டம் முதலி யவைகளை அமைத்து அவர்களுக்கு சலுகைகள் காட்ட அரசாங்கம் முன் வரவேண்டும். ஆசிரியர்களுக்கு பென்ஷன் கொடுத்தும் அவர்களுடைய குழந்தைகளுக்கு இலவசமாக கல்வி வசதி செய்து கொடுத்தும் வந்தால் அவர்கள் வருங்காலத்தில் நல்ல ஊதியம் கிடைக்கும் என்ற எண்ணம் ஏற்பட்டு அதனுல் அவர்களுக்கு ஊக்கம் உண்டாக்கமுடியும். ஏனென்றுல் அவர்கள்தான் வருங்கால சந்ததியர்களை முன்னேற்ற நிலைக்குக் கொண்டு வரக்கூடியவர்களாக இருக்கிறூர்கள். ஆகவே அவர்களுக்கு பென்ஷன் திட்டம், அவர்களுடைய குழந்தைகளுக்கு உயர்தர கல்விவரை இலவச படிப்பு வசதி முதலியவைகளைக் கொடுத்து அவர்களுக்கு கவர்ச்சி உண் டாக்குவதற்கு நல்ல வழிவகைகளைக் காட்டவேண்டும். அவர்களுக்கு அதிகப் படியான செலவு செய்யாவிட்டாலும் அவர்களுக்கு சில சலுகைகள் காட்டு வதன் மூலம் அவர்களுக்கு ஆசியர் தொழிலில் கவர்ச்சி ஏற்படும்படியும், ஊக்கம் ஏற்படும்படியும் செய்யலாம். அதற்குவேண்டிய வழிவகைகளை அரசாங்கம் செய்யவேண்டும். இதைக்கொண்டு வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

12th March 1955] [Sri A. Sambasivam]

" இப்பொழுது ஆசிரியர்களுடைய தொழில் கவர்ச்சிகரமாக இல்லாமல் இருப்பதால் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களுடைய மதிப்பு முன்பைவிட குறைந்திருக்கிறது. கொஞ்சகாலத்திற்கு முன்பு ஓரளவு ஆசிரியர்களுடைய தொழிலுக்கு மதிப்பு இருந்தது. உண்மையிலேயே பார்த்தால் ஆசிரியர்களுடைய தொழிலுக்கு கவர்ச்சிகரமான மேம்பாடுகள் இருந்தால் தான் அதற்கு மதிப்பு ஏற்படும். அந்தத் தொழிலுக்கு ஆர்வம் ஏற்படும். அப்பொழுதுதான் வருங்கால பிள்ளைகளை நல்ல நிலைமைக்குக்கொண்டு வருவதற்கு அவர்களுக்கு உத்சாகவும் ஆர்வமும் உண்டாகும். வருங்காலத்தில் நமது நாட்டை நல்ல நிலைமையில் வைக்கக்கூடிய பிள்ளைகளை அவர்கள் தயாரிக்கவும் முடியும். அப்படித் தயாரித்து வருங்காலத்தில் நல்ல சந்ததியார்களை நமக்குக் கொடுப்பார்கள்.

" அத்துடன் ஆதாரக் கல்வி நமக்கு பழையனதாக இருந்தாலும் இப்பொழுது அதைக்கையாளும் முறையில் பல குறைபாடுகள் இருக்கின்றன. மாதங்தோறும் ஆசிரியர்கள் சங்கங்களை அமைத்து அந்தந்த வட்டாரங்களில் கூடுகிறார்கள். அவ்விதம் கூடி அறிக்கைகள்விட்டு விளக்கம் சொல்லப்படுகிறது. ஆசிரியர்கள் பாடங்களை எப்படி கற்பிப்பது என்றெல்லாம் பேசுகிறார்கள். அந்தக் கல்வி முறை எந்த விதத்தில் பயனடைகிறது என்றெல்லாம் பேசப்படுகிறது. ஆரம்பப்பள்ளிக்கூடங்களில் என்ன நடக்கிறது, அந்தக் கல்வி சம்பந்தமாக என்னென்ன குறைகள் இருக்கின்றன என்பதைப்பற்றியெல்லாம் அந்தந்த வட்டாரங்களில் ஆசிரியர்கள்கூடி பேசுகிறார்கள். அவ்விதம் பேசி ஆசிரியர்கள் என்ன சொல்லுகிறார்களோ அவற்றையெல்லாம் அந்த கல்வித்துறையில் என்ன செய்யவேண்டும் என்பதையெல்லாம் அந்தந்த வட்டாரத்து கல்வித் துறையிலுள்ள அதிகாரிகள் மூலம் அரசாங்கத்திற்குத் தெரிவிக்கவேண்டும். அவ்வப்போது ஏற்படும் குறைகளை உடனடியாக நீக்குவதற்கு என்ன செய்யவேண்டுமோ அதற்கு வேண்டிய முயற்சிகளை அரசாங்கம் செய்து தரவேண்டும். அதற்கென்று தனிப்பட்ட குழுவை அமைத்து அதிகாரிகளுக்கோ அல்லது அரசாங்கத்திற்கோ தெரியப்படுத்தி அவற்றை நிவர்த்தி செய்துகொள்வதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளவேண்டும். அவர்களே வரவு செலவுகளையும் தயாரித்துக்கொள்ளுகிறார்கள். அப்படி தயாரிக்கும்போது பஞ்சு பட்டைபோடுதல், நூல் நூற்பு போன்றவைகள் செய்யப்பட்டு அவைகளுக்குக கணக்குகள் வைத்துக்கொள்ளவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அப்பொழுது செலவை அதிகரித்தோ அல்லது குறைக்கவேண்டிய இடங்களில் குறைத்தோ கணக்குகளைகாட்டவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அப்படி அவசியம் ஏற்படுவதால் ஆசிரியர்களும் பெரிய மாணவர்களும் வரவு செலவு கணக்குகளை தயாரிப்பதற்கு தெரிந்து கொள்ளுகிறார்கள். பிள்ளை வயதிலேயே வரவு செலவு கணக்குகளை பதிவு செய்யும்படியாக பழக்கமும் ஏற்படுகிறது. ஓரளவு அதிகமாக இருந்தாலும் குறைவாக இருந்தாலும் அதைத் தெரிந்துகொள்வதற்கு வசதி ஏற்படுகிறது. எதாகிலும் தவறுகள் ஏற்பட்டாலும் அதை நிவர்த்தித்துக்கொள்ளவும் தெரிந்து கொள்ளுகிறார்கள். ஆகவே அந்தத் துறையில் ஓரளவு சிக்கனமாக நடக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். அதற்கான வசதிகள் இருக்கின்றனவா என்பதைப்பற்றி கவனிக்க அரசாங்கம் தனிப்பட்ட ஒரு கமிட்டியை அமைக்கவேண்டும். கல்வித் துறையில் மிக்க ஆர்வம் உள்ள பெரியவர்களையும், ஓய்வு பெற்ற ஆசிரியர்களையும் மானேஜ்மெண்ட் ஆசிரியர்களையும் கொண்ட ஒரு குழுவை அமைத்து அதைப்பற்றி ஒரு முடிவு செய்தால் மிகவும் நன்றாக இருக்கும்.

(Sri P. G. Karuthiruman in the Chair.)

" கடைசியாக சேலம் ஜில்லாவைப்பற்றி கொஞ்சம் சொல்லவேண்டும் என்று விரும்புகிறேன். எனக்கு முன்பேசிய திருவாளர் கிருஷ்ணமூர்த்தி கௌண்டர் அவர்கள் இறைப்பற்றி பேசினார். அவர் அந்த ஜில்லாவிலுள்ள பெரியவர். நல்ல அனுபவமுள்ளவர். அந்த மாவட்டத்திற்கு தலைவராக இருந்து பல ஆண்டுகள் பணி செய்து வந்திருக்கிறார். எல்லா விஷயங்களையும் நன்கு அறிந்தவர். சேலம் ஜில்லாவிலுள்ள குறைகளை நன்கு தெரிந்தவர். சேலம் ஜில்லாவைப்பற்றி அவர் குறிப்பிட்டார். சேலம் ஜில்லா எல்லாத்துறையிலும் ரொம்பவும் பிற்போக்கான நிலைமையில் இருக்கிறது. அங்குள்ள மக்கள் ஜனநாயகத்தை நம்பியுள்ள மக்கள்.

[Sri A. Sambasivam] [12th March 1955

எல்லாத்துறையிலும் சேலம் ஜில்லா முன்னேற்றமடையவேண்டிய நிலைமை யில் இருக்கிறது. அங்கு ஏதோ இரண்டொருவர் அறிவாளிகளாகவும் மேம்பாடுடையவர்களாவும் தோன்றி விட்டபடியால் அதன்மேல் ஏதோ அந்த ஜில்லாவின் பேரில் ஒருவித பொருமை ஏற்பட்டு அரசாங்கம் அந்த ஜில்லாவின் பேரில் தங்களுடைய வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்வதற்கு முற்பட்டு விட்டார்கள் என்று கருதவேண்டியதாக இருக்கிறது. நகராண் மைக் கழகத்தின் கல்லூரி ஒன்று இருக்கிறது. அந்தக் கல்லூரியின் கீழ் உள்ள பள்ளிக்கூடங்களில் தேர்ச்சி பெற்றவர்களைத்தான் அந்தக் கல்லூ ரியில் சேர்த்துக்கொள்வது என்ற ஒரு கொள்கை இப்பொழுது இருந்து வருகிறது. மற்ற மாணவர்களை அதில் சேர்த்துக்கொள்வது இல்லை. சேலம் மாவட்டத்திலுள்ள மற்ற பள்ளிக்கூடங்களில் வாசித்து வரும் மாணவர்களுக்கு அந்தக் கல்லூரியில் இடம் கொடுப்பது இல்லை. மற்ற கல்லூரிகளுக்கு இருக்கும் விதிகளையும் அதற்கு எடுத்துக்கொள்ளவேண் டும் என்று வற்புறுத்தவேண்டும். பிற்போக்கு ஜில்லாவிற்குக் கொடுக்கப் படும் சலுகைகளையும் அந்த ஜில்லாவை ஒரு பிற்போக்கு ஜில்லா என்று எடுத்துக்கொண்டு அதற்கும் அந்த சலுகைகளைக் கொடுக்கவேண்டும்.

" அத்துடன் அங்கு தொழில் கல்வி ஏற்படுவதற்கான எந்த நடவடிக் கையும் இதுவரையிலும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. இனிமேலாவது எடுத்துக்கொள்ளவேண்டும். அங்கு ஒரு தொழில் கல்விக் கல்லூரியையும், கலைக்கல்லூரி ஒன்றையும் ஆரம்பிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்."

11-40 a.m. * Sri K. UPPI :—" Mr. Chairman, this year's Budget in respect of education is a progressive one. We owe a debt of gratitude to the Hon. the Finance Minister for that. But the policy of the Government with respect to languages is one to which I cannot subscribe fully. English is the only asset left by our foreign rulers. Language is not the free gift of the Englishmen. It has been acquired after paying a very high price. We have been spending crores and crores of rupees on English education. Lives of thousands of eminent persons have been spent over it. It cannot be denied that the position which we occupy in the international field to-day and the progress that this country has made are mainly due to our knowledge of the English language. If the learning of this language is to be discouraged in India, it will be a great loss to us. The trend towards the development of regional language and towards the driving out of English, if encouraged, will lead to the disintegration of our country. If our State is to be split into several States on a linguistic basis like the Tamil Nad, the Kerala State, etc., then in about a quarter of a century they will all become water-tight compartments. Then, for instance, a Malayalee will not be able to prosecute his higher studies in Tamil Nad. The same will be the case with regard to other States. So far as cultural development is concerned, we will be confined to our own State. So many difficulties will crop up if English education is given up. My view is that the study of English language should be encouraged along with that of regional languages.

" Now, a number of educational needs of Malabar have to be brought to the notice of the Government. Even Government institutions in Malabar are suffering for want of funds. The question of funds for a building for the Government Brennen College has been hanging fire for the last several years. The Government High Schools at Tirur and Malappuram have been suffering for want of sufficient accommodation for several years.

12th March 1955] [Sri K. Uppi]

" Primary education should be made compulsory in backward areas and especially in Malabar. One of the causes of failure of compulsory primary education is said to be the poverty of the people. I would suggest that noon meals may be provided to children in such backward areas.

" With regard to the education of Muslims, I have to say that the attitude of the Government for the last few years towards this problem has not been sympathetic. Arabic teachers are not provided in colleges. Even recently there was an advertisement for the post of an Assistant Arabic Lecturer. Applications were called for and interviews were conducted but no candidate was selected. But instead of orders of appointment the candidates received replies. Then the post was abolished. I would point out that Arabic was a language taught in all the high schools in Malabar. I request that Arabic pandits may be appointed in all Board High Schools and other high schools where there are sufficient number of students forthcoming who want to study Arabic. Another matter is facility for giving religious instruction. While on this question, I would urge that this Government should also follow the policy of the Andhra Government. It is published in to-day's papers that the Andhra Government have issued a Press Note to the effect that the buildings of Government institutions may be used for giving religious instruction. But in this State it is the other way about. The Government need not arrange to give any religious instruction but they must at least permit the Government school buildings to be used by such local people as come forward to give religious instruction to pupils outside the school hours.

" There should be a Urdu Lecturer in the Brennen College. Students studying in other institutions with Urdu as their second language find it difficult to get admission into the College as they are not able to prosecute their higher studies for want of such facility. Not only Muslims but other students also who take Urdu as their second language find it difficult to get admission into that college to continue their studies. I request the Government to remove this difficulty.

" With these words, I resume my seat."

* Sri V. R. NAGARAJAN :—" Mr. Chairman, at the outset, I would pay my homage to this Government for the bold policy that they have adopted in the Budget for granting free scholarships to all children of the State irrespective of caste, creed or religion. That was a concession for which the people of the State had been clamouring for a long time. From time to time there were also some jealous words uttered in regard to the free concessions granted to the Harijan and Backward Class students. The Government have now removed once and for all the scope for such complaints in this State.

" The step taken by our State to grant free scholarships to all children up to the III Form stage is also in consonance with

[Sri V. R. Nagarajan] [12th March 1955

the expectations of our Constitution. This is a thing which has been delayed for the last six years. At least now the Government have rectified this defect. The sooner it is done the better.

11-50 a.m. " Sir, our Constitution is our sacred document. It is our political Bible. According to the Directive Principles of the Constitution . . ."

SRI S. SWAYAMPRAKASAM :—" On a point of order, Sir. The hon. Member says that the Constitution is our political Bible. May I point out to him that the Constitution can be changed but not the Bible."

TEMPORARY CHAIRMAN (Sri P. G. Karuthiruman) :— " It is not a point of order."

* SRI V. R. NAGARAJAN :—" The grant of scholarship to all children is a step taken in the direction of setting up a socialistic pattern of society. Sir, I am really glad that we are really making rapid strides in the matter of spreading elementary education.

" Then I come to the educational reform. We are now passing through a period of silent revolution which has had its impact on many things in this State and education is not an exception to them. We are progressing socially, economically, culturally and educationally. We are also really passing through a period of renaissance, a renaissance which, like the Industrial Revolution that shook the Western countries in the 18th century, is now shaking our country. We have been able to find out methods for reforming the entire structure of education in this State. We had appointed a Committee under the chairmanship of Dr. Alagappa Chettiar to go into the question of elementary education. Under the chairmanship of Dr. A. Lakshmanaswami Mudaliar, the Committee appointed to consider the question of secondary education had already submitted its report. To our Vice-President, Dr. S. Radhakrishnan had been entrusted the work of changing the present system of university education. We have entrusted all these things in the safe hands of eminent educationists.

" While speaking on the reformation of education in our State in particular and in the country in general, I would like to say a word or two about the place of English language also. At the very outset let me make my position clear. When I express a certain opinion in respect of this matter, it should not be mistaken for a pro-Western attitude. It is not my intention to speak on behalf of any Western country. Sir, certain misconceived notions are constantly being placed before the public that only if the English language is eliminated from our educational system, our country can progress. I am not one of those who believe in that sentiment. I make bold to say that it is on account of the learning of the English language many of us have come up to occupy the present position. It is only on account of that that our country also has gained its freedom. It is only through the medium of the English

12th March 1955] [Sri V. R. Nagarajan]

language that the policies of the Englishmen with regard to the freedom of the country were attacked both in the press and on the platform. It is only the Englishmen who had taught us to attack their policies. Therefore, I plead and plead vehemently that English cannot be pushed out of our educational system or at least it cannot be pushed out from the colleges. Sir, it was surprising to read in the newspapers the other day that the Hon. Minister for Education, while participating in a function held outside this House and in this City, advocated that Tamil should be the medium of instruction at least in colleges and universities. We should not confuse the official language of the State with the imparting of English in colleges and universities. It is quite possible and it is easy to replace the present official language of the State. By all means, let the official language of the State be Tamil. After all, the primary object of changing the official language of the State to Tamil is to see that our common and ordinary people understand it.''

TEMPORARY CHAIRMAN :—'' The hon. Member has got two more minutes.''

* SRI V. R. NAGARAJAN :—'' Sir, if we want to progress, if we want to keep pace with the progress made in other countries and if we want to contribute our mite to the deliberations of the World Assembly and if we want to retain the place which we now occupy in the world, then English must be retained and it should be nurtured. But I do not mean to say that it should be at the cost of the mother tongue. By all means let us develop the mother tongue. By all means let all our people learn their own language but it should occupy its proper place.

'' Now I would like to say a few words about scholarships and other concessions shown to backward classes. Just as a beggar who will ask for half-anna if we give him quarter anna, I am also asking for more concessions for backward classes. In this respect I am also a beggar pleading for a public cause in this House. I would request the Government to extend the full-fee concession up to S.S.L.C. for all students belonging to backward classes at least from the next year. It should not be stopped with the III Form.

'' About reservation of seats for backward classes in the educational institutions, I must point out that only 40 per cent of the seats are reserved for backward classes and Harijans . . .''

TEMPORARY CHAIRMAN :—'' The hon. Member's time is up.''

SRI P. JEEVANANDAM :—'' தலைவர் அவர்களே, சமீபகாலத்தில் 11-58 p.m.
நமது நிதி அமைச்சரும், கல்வி அமைச்சருமான கனம் சுப்பிரமணியம் அவர்கள், தமிழினுடைய, முக்கியத்துவத்தைப்பற்றி, ஆரம்ப கல்வி யிலிருந்து கல்லூரிபடிப்புவரை, மிக ஊக்கத்தோடு பிரசாரம் செய்துவரு கிறார்கள். கல்வியினுடைய, பிரதானத்தைப் பற்றி, கல்வி அமைச்சரே, கருதுவதோடு கல்வி இலாகாவில் தமிழுக்கு என்ன மதிப்பு இருக்கிறது என்பதைப்பற்றி இந்த சபையினுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன். தமிழினுடைய மதிப்பை தமிழ் ஆசிரியர்களை

[Sri P. Jeevanandam] [12th March 1955

வைத்து மதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சென்னை பல்கலைக்கழகத்திலும் சரி, அண்ணாமலை பல்கலைக்கழகத்திலும் சரி, தமிழ் ஆசிரியர்களை, இங்கு வித்துவான், அங்கு புலவர் என்று அழைக்கிறார்கள். எஸ்.எஸ்.எல்.சி. தேரியபிறகு, வித்வான் பரீட்சை தேறுகிறார்கள். வெறும் வித்வானாகமட்டும் பரீட்சை தேறுகிறார்கள். எஸ்.எஸ்.எல்.ஸி. தேறி, வித்வான் பட்டம்பெற்று, விசேஷ பயிர்ச்சியும் பெறுகிறார்கள் ஒரு சில ஆசிரியர்கள். இந்த ஆசிரியர்கள், தமிழ் ஆசிரியர்கள் செய்யும் வேலை ஒன்றுதான். ஆனால் வெறும் வித்துவானுக்கு 40 ரூபாய் மாதச் சம்பளம், எஸ்.எஸ்.எல்.ஸி. தேறிய வித்துவானுக்கு மாதச்சம்பளம் ரூபாய் 45. விசேஷ பரீட்சை பெற்றுவிட்டால் ரூபாய் 85-லிருந்து ரூபாய் 150 வரை பெறுகிறார்கள் மாதம் ஒன்றுக்கு, அதாவது பி.ஏ. பி.டி., படித்தவர்களுக்கு. இதை மந்திரி சபையும் குறிப்பாக கனம் கல்வி அமைச்சரும் கவனிக்கவேண்டும். இரண்டுபேரும் செய்யும் வேலை ஒன்றுதான், ஆனால் விசேஷ பரீட்சை பெறுவதால், அதாவது பி.டி. பெறுவதால், மாதச்சம்பளம் ரூபாய் 85-லிருந்து ரூபாய் 150 வரையில் கொடுக்கிறார்கள் என்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். இது அவசியமில்லை. இப்படிப்பட்ட பாகுபாடு இருக்கக்கூடாது. அதனால் என்ன ஏற்படுகிறது ? ஆசிரியர்களுக்கு ரூபாய் 85--150 சம்பளம்பெற வேண்டுமென்று தோன்றுகிறது. அங்கு அதற்கு சந்தர்ப்பம் கிடைக்கிறதா ? அதற்காக, 4 அல்லது ஐந்து மாதம் ஆசிரியர் வேலையை விடவேண்டும். சென்னையில் படித்து பரீட்சை பெறவேண்டும். அதற்காக நாநூறு, ஐநூறு செலவு. இதை ரொம்பபேர் செலவு செய்யமுடியாது ; அவர்களுக்கு அந்த விசேஷ பரீட்சை பெறமுடியாது ; ஆசைப்பட்டாலும், பள்ளிக்கூட நிர்வாகஸ்தர்கள் அவர்களை அதைப்பெற விடுவதில்லை. 40 ரூபாய் மாதச்சம்பளம் வாங்கும் வித்துவானை வைத்துக்கொண்டு, 45 ரூபாய் மாதச்சம்பளம் வாங்கும் எஸ்.எஸ்.எல்.ஸி. வித்வானை வைத்துக் கொண்டு, அந்த வேலை நடக்கும்போது ஐந்து மாத பரீட்சை தேர்வுக்கு அனுப்பி, பிறகு ஏன் 85 ரூபாய் சம்பளம் அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். ஆகவே என் அபிப்பிராயத்தில் இந்த நிலைமை மாறவேண்டும்; சம்பளம் ஒரே சீராக இருக்கவேண்டும். சர்க்கார், அவர்களை ஐந்து மாத பரீட்சைக்கு அனுப்பவேண்டுமென்றால், அந்த ஐந்து மாதகால செலவையும் சர்க்காரே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதே எனது கோரிக்கை. அடுத்தபடியாக போதன மொழியைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள், விளக்கம் கூறும்போது சொன்னார்கள், 1948-ம் வருஷத்திலேயே கல்வி சீரமைப்பு கமிட்டியின் சிபார்சுபடி, தாய்மொழியை உயர்தர கலாசாலைகளுக்கு கொண்டுவர ஆரம்பித்தார்கள் என்று. அப்படியானால், காலேஜில், இண்டர்மீடியட் படிப்புக்கு வருபவர்கள் தமிழில் படித்தவர்களாக இருக்கிறார்கள், அப்படிப்பட்ட மாணவர்களுக்கு போதனமுறையை அந்த காலேஜ் வகுப்புகளில் ஆங்கிலத்தில் வைத்தால் எவ்வளவு கஷ்டமாக அவர்களுக்கு இருக்கும் என்பதைப் பார்க்கவேண்டும். ஆகவே அவ் வகுப்புகளில் ஆங்கிலம் போதனமுறையாக வைப்பது நியாயமல்ல. அவர்கள் எப்படி, எந்த போதனமுறைப்படி எந்த மொழியில் படித்திருக்கிறார்களோ அதற்குத் தகுந்தபடி, கல்வி நிபுணர்கள், எழுத்தாளர்கள் அவர்களுக்கு பாட புஸ்தகங்கள் தயாரிக்கவேண்டும். கல்லூரி வகுப்புகளுக்கு வரும்போதும், பாடங்களைத் தமிழிலிலேயே கற்றுக்கொள்ளமுடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆகவே போதனமொழி கல்லூரிகளிலும் கட்டாயம் தமிழாக இருக்கவேண்டும், அதற்கு அதிக செலவு ஆக முடியாதென்று கூறுகிறேன். இது வெகு சீக்கிரத்தில் அமுலுக்கு வரவேண்டுமென்பதை இங்கே வற்புறுத்த ஆசைப்படுகிறேன். இது, தமிழ் மொழியின் முற்போக்குக்கு பேருதவியாக இருக்கும் ; கலைச்சொற்களை பெறுவதற்கும் பேருதவியாக இருக்கும், மாணவர்கள் விஷயங்களை நன்றாக புரிந்துகொள்வதற்கும் பேருதவியாக இருக்கும்.

" அடுத்தபடியாக மாணவர்களுடைய கோரிக்கை. ஏற்கனவே இரண்டு அங்கத்தினர்கள் பேசினார்கள் செலக்ஷனைப்பற்றி. இந்த வடிகட்டும்முறை அவசியமே இல்லை. இந்த வடிகட்டும் முறை மாணவர்களுக்கு ஒரு அதிர்ச்சியைத்தான் ஏற்படுத்துகிறது. பின்னால் பொதுத்தேர்வு இருக்கும்

12th March 1955] [Sri P. Jeevanandam]

போது முன்னால் ஒரு தேர்வு எதற்காக? அதோடுமட்டுமல்ல. இந்த முன் தேர்வில் தவறினால், மேற்கொண்டு ஒரு வருஷம் முழுவதும் திரும்ப அந்த வகுப்பிலேயே படிக்கவேண்டுமென்று இருப்பது சரியல்ல. அந்த செலக்ஷன் பரீட்சை ஒழிக்கப்படவேண்டும். அதற்கு அப்பால் நான்காவது பாரம் வரையில், மாணவர்கள் எல்லோருக்கும் இலவசக் கல்வி கொடுக்க ஏற்பாடாகி இருப்பதற்காக நாம் சர்க்காரை பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் நடுத்தர வகுப்பார்தான், ஹைஸ்கூலுக்கு படிக்க வருகிறார்கள். அவர்கள் எப்படி பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் பார்க்க வேண்டும். இப்போது, மாதம் 7 ரூபாய், 8 ரூபாய் சம்பளம் கட்ட வேண்டிய வகுப்புக்கு கொஞ்சகாலத்திற்கு முன்பு ரூபாய் 5-4-0தான் சம்பளம் கட்டவேண்டும். ஆகவே இந்தச் சம்பள விகிதமும், பழய நிலைமைக்கு கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். தற்போது **Public Examination fees** 15 ரூபாயிக்கு உயர்ந்துவிட்டது; அதையும் பழய விகிதத்திற்குக குறைக்கவேண்டுமென்றும் வற்புறுத்த ஆசைப்படுகிறேன். இண்டர்மீடியட் வகுப்பில், ஒரு மாணவரிடமிருந்து குறைந்தது 45 ரூபாய், ஒரு **term**-க்கு **fees** ஆக வசூலிக்கிறார்கள். அதையும் ஓரளவுக்கு குறைக்கவேண்டுமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

"அடுத்தப்படி புஸ்தகங்களைப்பற்றி. மாகாணம் முழுவதிலும் உள்ள பாட புஸ்தகங்களைப் பார்த்தால் ஆச்சரியமாக இருக்கும். ஒவ்வொரு ஜில்லாவுக்கு, ஒரே வகுப்பாக இருந்தாலும், ஒவ்வொருவிதமாக பாட புஸ்தகங்கள் இருக்கும். இப்பாட புஸ்தகங்கள் எல்லாம், ஒரேவிதமானதாக இருக்க வேண்டுமென்று குறிப்பிடுகிறேன். அவ்விதம் செய்தால் மாணவர்களுக்கு லாபம் அதிகம் உண்டென்று கருதுகிறேன்.

"பிறகு விளையாட்டு இடங்கள். பல மாணவர்களுக்கு, பள்ளிகளில் விளையாடுவதற்கு இடங்களே கிடையாது. கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், கல்வி விரிவாக்கப்படவேண்டுமென்றும், கல்வித்தரம் உயரவேண்டுமென்றும். கல்வியின் எல்லா அம்சங்களேயும் எடுத்துக் கொண்டால், முக்கியமாக, மாணவர்களுக்கு விளையாடும் இடங்கள் அத்தியவசியமானவை. ஆகவே விளையாடும் இடங்களை அதிகரிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"ஹாஸ்டல் கோரிக்கை இதற்கு அடுத்தாற்போல் கவனிக்கவேண்டிய விஷயம். **Law** காலேஜில் ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் படிக்கிறார்கள். இதில் அநேகர் ஹாஸ்டல் வசதி இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். இம்மாணவர்களுக்கு ஹாஸ்டல் வசதி இல்லை என்று எதிர்கட்சி அங்கத்தினர்களும் சர்க்கார் தரப்பு அங்கத்தினர்களும் ஏற்கனவே புகார் கிளப்பினார்கள். ஆகவே இவ்வாஸ்டல் விஷயத்தை சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். ஒரு வருஷத்திற்கு, 50 ஆயிரம் ரூபாயிலிருந்து 60 ஆயிரம் ரூபாய் வரையில் காலேஜ் மாணவர்களிடமிருந்து சம்பளமாக இங்கு வசூலாகிறது. **Arts** காலேஜ் என்றால், அதனுடைய மாணவர்களுக்கு ஹாஸ்டல் கிண்டியில். எப்படி இந்த நிலைமையில் மாணவர்கள் சௌகர்யமாக படிக்கமுடியும்? இதிலே சர்க்கார் முக்கிய கவனம் செலுத்த வேண்டும். மாணவர்களுக்கு இங்கு **University Club** இருப்பதாகச் சொல்லலாம். ஆனால் அந்த **University Club**-ல் 150 மாணவர்கள்தான் இருக்கமுடியும். ஆகவே, மாணவர்களுக்கு **Residential College** வசதிகள் செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"பல கல்லூரிகளில் கக்கூஸ் வசதி போதாது. மாணவர்கள் அங்கு **queue** வரிசையில் நின்று மலஜலம் கழிக்கப் போகவேண்டியதாக இருக்கிறது. ஆகவே காலேஜுகளில் கக்கூஸ் வசதிகள் அதிகம் செய்ய வேண்டுமென்று குறிப்பிட ஆசைப்படுகிறேன். **Mess** விஷயத்தில், மாணவர்கள் கொடுக்கும் பணத்திற்கு ஏற்ற சாப்பாடு கொடுக்கப்படுவதில்லை என்ற புகார் இருக்கிறது. இது கவனிக்கப்படவேண்டிய விஷயமாகும். தொழில்க் கல்வியைப்பற்றி சொல்லவேண்டியதேயில்லை. ஐந்தாண்டு திட்டத்தில் நாட்டை தொழில் மயமாக்கப்போகிறார்கள் என்று இருக்கிறது.

[Sri P. Jeevanandam] [12th March 1955

ஆகவே அத்திட்டத்திற்கு ஏற்றாற்போல் இங்கே, படிப்பும் இருக்கவேண்டும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன். இங்கே 50 **Arts** காலேஜுகள் இருக்கின்றன, ஆனால் ஐந்து இன்ஜினீரிங் காலேஜுகள்தான் இருக்கின்றன. விவசாய இன்ஜினீரிங் காலேஜுகள் அமைக்க தாராளமாக சர்க்கார் பணம் செலவழிப்பது நவீன சமுதாயத்திற்கு மிகமிக அவசியம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆசிரியர் குறைகளைப்பற்றி ஏற்கனவே சொல்லிவிட்டேன். குறைந்தபட்ச சம்பளத்தை சென்ட்ரல் பே கமிஷன் சிபார்சு செய்திருக்கிறார்கள். செகண்டரி கல்விக் கமிஷனும் இச்சம்பள விகிதத்தை சிபார்சுசெய்து, சராசரி ஆசிரியர்களுக்கு மாதம் நூறு ரூபாயாவது, சம்பளமாக கொடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறது. அன்னை பிதா, குரு, இவர்களை தெய்வமாக கருத வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆனால், இந்த மூன்றாவது தெய்வமாகக் கருதப்படும் ஆசிரியர்கள், பிச்சை எடுப்பது மாதிரியான நிலைமையில் இருப்பதைக்கண்டு வெட்கப்படவேண்டும். ஆசிரியர்களுக்கு நல்ல சம்பளம் கொடுத்து உற்சாகப் படுத்தினால்தான் நாட்டில் கல்வித் தரம் உயரும். அது தெரிந்தும், இன்னும் மாற்றாந்தாய் கவனிப்புத்தான் ஆசிரியர் விஷயத்தில் காட்டிக்கொண்டிருக்கிறது இந்த சர்க்கார் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இவ்வாசிரியர்களுக்கு **provident fund** உத்திரவாதம் செய்யவேண்டும். ஆசிரியர்களை விலக்க வேண்டுமென்றால், ஆசிரியர்கள் ஸ்தாபனத்தைக்கேட்டு விலக்கவேண்டும். இது அவர்களுடைய அந்தஸ்த்தை உயர்த்துகிறது என்பதை சொல்லிக்கொள்ளத் தேவை
12-09 p.m. யில்லை. கவி சுப்ரமண்ய பாரதியார்,

'வீடுதோறும் கலையின் விளக்கம்
வீதிதோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் கல்வி இலாததோர் ஊரை
தீயினுக் கிரையாக மடுத்தல்'

என்றும்

திருவள்ளுவர்,

'தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்'

என்றும்

சொல்லியிருக்கிறார். அதே முறையில்தான் அரிஸ்டாட்டலும் சொல்லியிருக்கிறார். கல்வியின் முடிவு ஊழிய உணர்ச்சி, குடும்ப, சமுதாய ஊழிய உணர்ச்சியோடு பழகுவதுதான். தொழிற் கல்வி கொண்டுவர வேண்டும் என்று கல்வி மகான்கள் எல்லோரும் சொல்லுகிறார்கள். அதைத் தான் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

"கல்வியின் தரம் எவ்வளவு மோசமாக இருக்கிறதென்பதை நாம் பார்க்கவேண்டும். பொது அறிவின் தரம் கெட்டு விட்டது. சரித்திர, பூகோள அறிவு ரொம்பக் கம்மி. தரக்கேடு ஏன் ஏற்பட்டிருக்கிறது? வாழ்க்கைக்கும் கல்விக்கும் ஜீவனுள்ள உறவு இல்லாமல் சில பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. இப்பொழுது கொடுக்கப்படும் கல்வி மாணவனுடைய பூரண வளர்ச்சிக்குத் துணை புரிவதாக இல்லை. அது ஒருதலைப்பட்சமாக இருக்கிறது.

"ஆங்கிலம் போதனா மொழியாக இருப்பதால் ஆங்கிலத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது. கல்லூரியிலும் தாய் மொழி போதனா மொழியாக இருக்கவேண்டும். ஆங்கிலத்திற்கு சர்வ தேசீய மதிப்பு கொடுக்கவேண்டுமென்று ஒரு அங்கத்தினர் குறிப்பிட்டார். பல தேசங்களில் அந்தந்த தேசத்து மொழியில்தான் கல்வி அளிக்கப் படுகின்றது. அந்தந்த தேசத்து மக்களின் அன்றாட வாழ்க்கையில் இருக்கக்கூடிய பிடிப்பு அவரவர்களின் மொழியின் மூலமாக வெளிப்பட்டு, அந்தந்த மக்களின் எண்ணத்தைப் பிரதிபலிக்கக் கூடிய முறையில் அவரவர்கள் மொழி வளர்ந்து வந்திருக்கிறது. அதனால்தான் ஒரு

12th March 1955] [Sri P. Jeevanandam]

தேசத்து பாஷைக்கு சர்வதேசத்தில் ஒரு மகத்தான வெற்றியோ, ஒரு மதிப்போ கிடைக்கிறதேயல்லாமல் ஏதோ ஒரு பாஷை இதுவரை சர்வ தேசப் பெயர் வாங்கிவிட்டது என்ற காரணத்தைச் சொல்லி, அதைப்படிப் பதன் மூலமாகத்தான் நம்முடைய தேசத்திற்கு சர்வதேசத்தில் மதிப்பு கிடைக்கும் என்பது பொய் என்று பல நாடுகளில் நிரூபிக்கப்பட்டிருக் கிறது. சீனுவில் சீன பாஷைதான் போதனு மொழியாக இருக்கிறது. அதே மாதிரி உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் அந்தந்த தேசத்தின் மொழிதான் போதனு மொழியாக இருந்து வருகின்றது.

"சுதந்திர வளர்ச்சிக்கு உகந்தபடி மக்கள் சுயமாகச் சிந்திப்பதற்கு இன்று இருக்கக்கூடிய கல்வி ஆதரவாக இல்லே. ஆசிரியர்-மாணவர் களிடையே சரியான உறவை தற்போதைய கல்விமுறை ஏற்படுத்துவது இல்லே. ஆசிரியர் கற்பனைத் திறன், போதிக்க முடியாதபடி பாடத் திட்டம், நோட்ஸ், ஆகியவைகளினுல் கல்வியின் தரம் குறைந்திருக்கிற தென்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

"ஒழுக்கக் கல்வி என்று தனியாக போதிக்கவேண்டிய அவசியமில்லே. நம் நாட்டின் சமுதாய வளர்ச்சி, பண்பாடு, லட்சியம் ஆகியவைகள் ஒழுக்கக் கல்வியை அளிப்பனவாக இருக்கின்றன. மேலும், ஆரம்பப் பாடசாலேயிலும், உயர்தரப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இப்பொழுது போதிக்கப்படுவதே போதுமானது. ஒழுக்கக் கல்வி வேண்டுமென்று நினேத் தால் மதச்சார்பற்ற ஒழுக்கக் கல்வி கொடுக்கப்படவேண்டும். ஒழுக்கபோ தனே என்று சொல்லி அதற்காக கடவுளேக் கொண்டு வந்தோ, மோட் சத்தைக் காட்டியோ போதிக்க வேண்டியதில்லே. மத போதனேக்கு ஸ்பெ ஷல் ஸ்கூல்கள், ஆங்கிலோ-இந்தியர்களுக்கு என்று தனிப் பள்ளிக் கூடங்கள் வைத்துக்கொள்வதில் ஆட்சேபணே இல்லே. ஸ்பெஷல் ஸ்கூல் கள் "கான்வென்ட்" போன்று இருக்கட்டும். ஆனுல், கல்விச்சாலேகளில் எந்த ஒரு குறிப்பிட்ட மதத்தையும் போதிக்க இடம் கொடுக்கவே கூடாது என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்த விரும்புகிறேன்.

"கலே வளர்ச்சி சம்பந்தமாக ஒரு வார்த்தை. நமது நாட்டிலும் சமீப காலத்தில் கலே வளர்ந்து வருகிறது. ஆனுல், ஆபாசக் கலே வளர்ந்து போகிறது என்பதையும் கவனிக்கவேண்டும். நம் நாட்டில் சரியான முறையில் கலே வளர வேண்டும். நம்முடைய நிதி மந்திரி, பிரதம நீதிபதி ஸ்ரீ ராஜமன்னுர் போன்றவர்களும் கலே வளர்ச்சிக்காக உழைக்கிருர்கள். ரீஜனல் நாடக அகடமி இருக்கிறது. நம் நாட்டின் பண்பாடுக்குகந்த முறையிலும், முற்போக்குக் கருத்துக்களே மக்களிடையே பரப்பக்கூடியதாகவும் நல்லமுறையில் கலே வளர எல்லோரும் பாடு படவேண்டுமேயொழிய கலே வளர்ச்சி என்ற பேரால் ஆபாசக் கலே வளர்ச்சி, அபாயகரமான கலே வளர்ச்சி ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது மிக மிக அவசியம். இந்த அம்சங்களேயெல்லாம் சர்க்கார் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்."

SRI P. M. MUNUSWAMY GOUNDER :—"கனம் சேர்மன் அவர்களே 12-12 p.m.
இன்று நமது கல்வி அமைச்சரும் நிதி அமைச்சருமான கனம் ஸ்ரீ ஸி. சுப்ரமணியம் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்தக் கல்வி மான்யத்தை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்பு கிறேன்.

"நம்முடைய நாடு சமுதாயத் துறையிலும், பொருளாதாரத் துறையி லும் முன்னேற்றம் அடையவேண்டுமென்றுல் மக்களுக்குக் கல்வி மிகவும் இன்றியமையாதது என்பதை எல்லா அங்கத்தினர்களும் அறிவர். ஆவடி யில் நிறைவேற்றிய தீர்மானத்தின்படி இந்த நாட்டை சோஷலிச பாணியில் அமைப்பதற்கும், நம் இந்திய சர்க்காரின் முக்கியமான கொள்கைகளின் ஒன்றுகிய நாட்டு மக்களுக்கெல்லாம் கல்வி அளிக்கவேண்டுமென்ற லட் சியத்தை நிறைவேற்றுவதற்கும் ஏற்ற முறையில் நம் ராஜ்யத்தில் கல்விக் கொள்கை எடுத்துக்காட்டக இருக்கிறது. அதாவது ஆண்டுக்கு ரூ 1,200-க்குக் குறைந்த வருமானம் உள்ளவர்களின் குழந்தைகளுக்கு

[Sri P. M. Munuswamy Gounder] [12th March 1955

நடுத்தரப் பள்ளிக்கூட நிலைவரை, அதாவது மூன்றும் படிவம்வரை, இலவச கல்வி அளிக்க முன்வந்திருக்கிறார்கள். அதுவும் குறைந்த வருமானம் உடையவர்களுடைய குழந்தைகளெல்லோருக்கும், சாதி, சமய, இன வேறுபாடு இல்லாத முறையில் கல்வி வசதி அளிக்கப்படும் என்று சொல்லப் படுகிறது. இதற்காக நான் கனம் மந்திரி அவர்களைப் பாராட்டுகிறேன்.

" ஆரம்பப் பள்ளிகள் தற்போது கிராமங்களில் திறக்கப்பட்டு வேலை செய்து வருவதை நான் கண்கூடாகப் பார்த்திருக்கிறேன். அதில் அநேக தவறுகள் நிகழ்ந்து சில பள்ளிகள் வேலை செய்யாமல் இருக்கின்றன. அதற்குக் காரணம் என்னவென்பதை சர்க்கார் ஆராயவேண்டும்.

" நாம் ஒரு பள்ளியைத் திறக்கும்போது, அதற்குப் போதிய ஆசிரியர்களை நியமிக்கின்றோம். அந்த ஆசிரியர்களை நியமிக்கும்போது அவர்களுக்குப் போதுமான வசதி இல்லாமல் அவர்கள் ஒரு வாரம் இரண்டு வாரம் இருந்துவிட்டு அவர்கள் சொல்லாமல் மூட்டை கட்டிக்கொண்டு ஓடி விடுவதற்குவேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துகிறது. ஆகையால் ஆரம்பப்பள்ளியொன்றை ஒரு கிராமத்தில் திறப்பதற்குமுன் அந்த கிராமத்தில் ஆசிரியர்கள் தங்குவதற்கு வேண்டிய போதுமான வசதியை ஏற்படுத்திக்கொடுத்தால்தான் ஆரம்பப் பாடசாலைகளை நாம் திறம்பட நடத்தி வருகிறோம் என்று பெருமையாக சொல்லிக்கொள்ளமுடியும். ஆரம்பப் பள்ளிகளுக்கு காலாகாலத்தில் ஆசிரியர்களை அமர்த்துவது இல்லை. அவர்களுக்குப் போதுமான பயிற்சி கொடுக்காமல், கனம் அங்கத்தினர் ஸ்ரீ சாம்பசிவ ரெட்டியார் சொன்னதுபோல, மற்ற துறைகளில் வேலை கிடைக்காமல் திண்டாடிக்கொண்டிருப்பவர்கள்தான் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து, உபாத்தியாயர்களாக வருகிறார்கள். அந்த வேலையிலும் தொடர்ந்து இராமல் வேறு நல்ல வேலை கிடைத்தவுடன் ஆசிரியர் வேலையைவிட்டு விட்டு ஓடிவிடுகிறார்கள். நம் நாட்டின் முன்னேற்றத்திற்கு ஆதாரமாக உள்ள சிறுவர் சிறுமியர்களுக்கு நல்லவிதமான கல்வியறிவு அளிப்பதற்கு, இந்த நாட்டை எல்லாத்துறைகளிலும் வருங்காலத்தில் உயர்த்துவதற்கு காரண கர்த்தர்களாக இருப்பவர்கள் ஆசிரியர்கள். அப்படிப்பட்ட பொறுப்புள்ள வேலையைச் செய்துவருபவர்களாகிய ஆசிரியர்கள், அந்த மனோபாவத்துடன் வேலைசெய்வதற்கேற்ற சூழ்நிலை ஏற்படாமல், அவர்கள் ஏதோ வயிற்றுப் பிழைப்புக்காக ஆசிரியர் வேலை பார்க்கிறார்களேயொழிய உண்மையிலேயே மக்கள் முன்னேற்றம் அடையும்படியாக அவர்கள் உழைப்பதில்லை. காரணம் அவர்களுக்குப் போதிய வசதிகள் இல்லாததுதான். ஆகவே, பள்ளி ஆசிரியர்களுக்குக் கட்டாயமாக போதிய வசதிகள் செய்து தரவேண்டும். சம்பளமும் நல்லமுறையில் கொடுக்கப்படவேண்டும். அவர்கள் ரிடையர் ஆனவுடன் பென்ஷன் கட்டாயமாக கொடுக்கப்படவேண்டும். அப்படியிருந்தால்தான் ஆசிரியர் உத்தியோகத்திற்கு வருபவர்களுக்கு அதில் ஒரு பற்றுதல் இருக்கும். அப்பொழுதுதான் உண்மையாக உழைத்து நாட்டின் செல்வமாகிய சிறுவர் சிறுமியர்களுக்கு நல்ல முறையில் அவர்களை முன்னேறும் வகையில் பாடம் சொல்லிக்கொடுப்பார்கள். ஆசிரியர்கள் உத்சாகத்துடன் இருந்தால்தான் மாணவர்களுக்கு உத்சாகமாகப் பாடம் சொல்லிக்கொடுக்கமுடியும். ஆகவே ஆசிரியர்களுடைய குறைகளை நாம் நிவர்த்தி செய்துகொடுக்கவேண்டியது அவசியமாகும். ஆசிரியர்களுக்குத் தங்கள் உத்தியோகத்தில் பற்றுதல் இல்லாமலிருந்தால் சிறிது காலம் ஆசிரியர் உத்தியோகம் பார்த்துவிட்டு ஓடிவிடப்பார்ப்பார்கள். இவ்விஷயத்தை சர்க்கார் ஊன்றி கவனித்து இதில் எவ்விதமான மாறுதலைச் செய்யவேண்டுமோ அதை உடனடியாகச் செய்தே தீரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

12 17 p.m. " அடுத்தபடியாக நான் தொழில் கல்வி இன்றியமையாதது என்பதை மிகவும் வற்புறுத்த விரும்புகிறேன். காரணம், நமது நாடு ஒரு விவசாயநாடு, இந்த நாடு பொருளாதார துறையில் உயரவேண்டுமானால், அவசியம் தொழில் கல்வி ஏற்படுத்திக்கொடுத்தே தீரவேண்டும். பொதுவாக, சாதாரணமாக, கல்வி கற்று பட்டம் பெற்றுவிட்டால் மட்டும் உத்தியோகம் கிடைப்பது இல்லை. ஆகையால் தொழிற் கல்வியை, அவரவர்களுடைய புத்திக்கு தகுந்தாற்போல், எந்தத் தொழில் பிடிக்கிறதோ அந்தத் தொழிலை கற்றுக்கொடுக்கவேண்டும். இப்படி பார்க்கும்போது, எங்கள் ஜில்லாவை, அதாவது சேலம் ஜில்லாவை எடுத்துக்கொண்டால்

12th March 1955] [Sri P. M. Munuswamy Gounder]

ஒரு தொழில் கல்வி போதிக்கும் பள்ளிகூடம் இல்லாமலிருக்கிறது. சேலம் ஜில்லாவை பற்றி நான் அதிகம் சொல்லவேண்டியதே இல்லை. நண்பர்கள் திரு **D. Krishnamoorthy Gounder,** திரு. சாம்பசிவ ரெட்டியார் அவர்களும் எடுத்து உரைத்தார்கள். நமது மாகாணத்தில் மிகப் பெரிய ஜனத்தொகையைக் கொண்டது (33 லட்சம்) சேலம் ஜில்லா. அந்த ஜில்லா மிகவும் பிற்போக்கான நிலையில் இப்போதும் இருந்துகொண்டுதான் இருக்கிறது. அதற்கு காரணம் நமது சர்க்கார் அந்த ஜில்லாவின் மீது அதிகமான கவனம் செலுத்துவதில்லை என்பது தான் என்னுடைய கருத்து.

" இரண்டாவதாக, இந்த ஜில்லாவில் காலேஜ் ஒன்றே ஒன்றுதானிருக்கிறது. அதுவும் முனிஸிபாலிடியால் நடத்தப்படுகிறது. அந்த முனிசிபல் காலேஜில், அந்த ஊரில் இருக்கும் மாணவர்களை சேர்ப்பதற்குத்தான் வசதியிருக்கிறதே தவிர, இதர ஜில்லாவில் இருந்து வருபவர்களையோ, அதே ஜில்லாவின் பக்கத்து தாலூகாவிலிருந்து வருபவர்களையோ சேர்க்க வசதியளிக்க முடியாத நிலையிலிருக்கிறது. சேலம் ஜில்லா போர்ட்டில் சுமார் 19 லட்சம் ரூபாய் ரெயில்வே செஸ் (cess) என்கிற **Reserve Fund**-ல் இருக்கிறது. இந்த கஷ்டத்தை போக்க அந்த பணத்தை ஒதுக்கியாகிலும் ஒரு காலேஜ் கட்டி, ஜில்லாவில் இருக்கும் எல்லா மாணவர்களுக்கும் படிக்கத் தகுந்த வசதியளிக்க வேண்டும். இந்த யோசனையை ஏற்கனவே கனம் நிதி மந்திரி அவர்களிடம் சொல்லியிருக்கிறோம். இருந்தாலும் அவர் எங்களுடைய யோசனை சரியில்லை என்று கூறுகிறார். அவர் மறுபடியும் ஆலோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். சும்மா தூங்கிக்கொண்டிருக்கும் அந்த பணத்தை ஏன் நமது சர்க்கார், அதிகமான பிள்ளைகளுக்கு கல்வி போதிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன், எடுத்து ஒதுக்கி, புது கல்லூரியை கட்டிக் கொடுத்து மாணவர்களுக்கு வசதி செய்து கொடுக்கக்கூடாது என்று கேட்கிறேன். அப்படி கட்டும்போது, அவசியம் சேலம் வட பகுதியில், கிருஷ்ணகிரியில் கட்டிடம் கட்டவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டாவதாக ஏற்கனவே வற்புறுத்தப்பட்ட கட்டாய கல்வி மிகவும் அவசியம் என்பதையும் மறுபடியும் வற்புறுத்த விரும்புகிறேன்.

" அடுத்தபடியாக கடந்த 1954-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் நமது சர்க்கார் ' **Madras Information** ' என்ற புத்தகத்திலும் மற்ற பத்திரிகைகளிலும் வன்னியகுல க்ஷத்திரிய மாணவர்களுக்கு **full fee concession** என்று பெரிய **Heading** கொடுத்து, அதாவது நான்கு ஜில்லாக்களில், சேலம், திருச்சி, தென் ஆற்காடு, தஞ்சாவூர், இந்த ஜில்லாக்களில் வன்னியகுல க்ஷத்திரிய மாணவர்களுக்கு **full fee concession** கொடுத்து இருக்கிறோம் என்று விளம்பரம் செய்து, உத்திரவு பிறப்பித்து இருந்தும்கூட, தற்போது நிதி மந்திரி அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன் அசெம்பிளியில் கேட்ட போது அது மாதிரி இல்லை என்று பதில் அளித்திருக்கிறார்கள். இந்த மாதிரி நமது சர்க்கார், ஏற்கனவே ஒரு உத்திரவை பிறப்பித்து விட்டு மறுபடியும் அந்த உத்திரவை திருப்பிச் சொல்வது தவறு. வன்னியகுல க்ஷத்திரியர்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்பதை, அவர்கள் ஜனத் தொகையைக் கொண்டு சர்க்கார் உணர வேண்டும். இரண்டாவதாக அவர்கள் ஹரிஜனங்களை விட மிகவும் பிற்போக்கான நிலைமையில் இருக்கிறார்கள் என்பதையும் உணரவேண்டும். அப்படி இருக்கும்போது அவர்களுடைய நிலைமையை உயர்த்த வேண்டுமென்றால், இந்த மாதிரியான **concession** கொடுத்தால் தான், அவர்கள் தரத்தை உயர்த்த முடியுமே தவிர வெறும் வாயால் சொல்லிக்கொண்டிருந்தால் அவர்களை உயர் நிலைக்கு கொண்டுவர முடியாது. இந்த **full fee concession** என்பதை குறைந்தது 10 வருஷத்திற்காவது கொடுத்து உதவினால்தான் அவர்கள் உயர் நிலைக்குக் வருவார்கள் என்பதையும் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இத்துடன் நான் முடித்துக் கொள்ளுகிறேன்."

12–20 p.m.

* Sri M. NARAYANA KURUP :—" Mr. Chairman, Sir, the Hon. the Minister for Education indicated a progressive expenditure on education. But considering the progress in our population also, it will be evident that we have not made much headway in

[Sri M. Narayana Kurup] [12th March 1955

increasing the percentage of literacy. I will go further and say that if we are to honour the commitments under our Constitution, the process has to be accelerated. Though my statistics may not be up-to-date, I wish to say that there are 272, 1,148 and 2,500 villages having a population of over 2,000, 1,000 to 2,000 and 500 to 1,000 respectively, which do not still have a single school. This shows the magnitude of the problem. If we got at this pace, I do not know whether and when we will be able to impart free and compulsory education to the entire school-going population.

" Sir, the Government educational policy has to be defined clearly and precisely. Conflicting views were expressed on the floor of the House and it is for the State to make up its mind. All of us are one in pleading for encouragement to regional languages. But even some of those who plead for encouragement to regional languages want the retention of English in the university stage. Unless we bifurcate or sub-divide still further the elementary, secondary and university courses, there is bound to be some amount of conflict in respect of the languages. If the students study their subjects in their curriculum of studies in a certain language up to a particular stage, they cannot give it up and adopt a different medium altogether when they go to the next stage or to a higher course. Therefore, this is a matter which deserved grave and careful consideration. All these can be combined together as different parts of a homogeneous whole so that the scientific and modern achievements which are obtainable in all parts of the world can be made use of by us consistent with our necessities and prestige.

" Then, Sir, certain Members have pleaded for higher qualification for teachers and I am one with them. But so long as we choose to retain the people with lesser qualification in this department, it is for the Government to see that they are also treated like others. I specially mention a small class of people, viz., the lower elementary teachers about whom questions were also asked on the floor of the House. The Hon. Minister replying to these questions said that the number of such teachers was negligible and they were a vanishing class. Let them vanish. But so long as they remain in the department, they must be treated like others. As a matter of fact, the increments and other amenities given to the other elemenary school teachers are not given to them and I plead on behalf of this vanishing class of people that they may be treated fairly so long as they are retained in this department.

" Sir, the question of improving the educational facilities is a matter which requires thorough examination and consideration. A casual mention of this matter was made by some hon. Members. In many places we find a boys' school, a girls' school, a Muslim school and a labour school situated close to each other. As a result of this, a number of teachers have to be employed and there is wastage of money and inefficiency also to some extent. Ours is no doubt a secular State. I strongly adhere to the principle that religious considerations should not be imported into our educational institutions. Because, we have followers of various religions

12th March 1955] [Sri M. Narayana Kurup]

and communities in the schools. It is only by strictly adhering to the theory of secularism that we can satisfy everybody and go forward. I think the Government will do well to institute an enquiry to find out how best the schools can be spread over taking into consideration the facts mentioned by me just now. At present there are no schools in certain places. On the other hand, there are a number of schools in some other places where they are not at all necessary. The Committee of enquiry that I have suggested may be asked to suggest ways and means by which all these may be combined together and adequate number of schools can be started in all the places so that there may not be wastage of men and material and so that there may be efficiency also. If the Government agree to do this, it will be an achievement indeed.

" There is another point to which I wish to make a reference, and it is about the language pandits. There are two grades of language pandits, class I and class II. In order that one may be promoted or retained in class I, there must be at least 7 periods of work for him. I understand that many of the Hindi pandits are hard hit by this order. Many of them, I understand, who were in the higher grade have been demoted for no fault of theirs. So far as the regional languages are concerned, there is no such difficulty. If the Hindi pandits suffer as they have no adequate work to do, of course our own system of education has to be blamed. At this stage I wish to say that it is only at our own risk we can neglect our national language, Hindi. So, the fate of the Hindi teachers who have been demoted or who have suffered losses on account of the fact that they have no work for 7 periods is a matter that has to be very carefully considered.

" With regard to basic education, it will be found that only one per cent of the students are now served by basic schools. Even these schools are basic schools only in name. The other day, the Hon. the Minister for Education said that there were about 200 basic schools in the State. I wish to say that these schools are not at all equipped with the necessary materials needed for imparting basic education. In actual practice what happens is that only the name-board of the school is changed. This should not be the case, Sir. If we want to impart basic education to our pupils, there 12-30 must be proper materials and equipment available in the basic p.m. schools so that the students may be effectively taught. I wish also to say one word with regard to detentions. Whether there should be detention or whether there should be examination are questions which agitate the minds of all people. I am positively of opinion that in the matter of public examinations, there should be no detention. We know education is being commercialised now-a-days. We also know the range of disparity in the fees collected in schools for III and IV forms. Naturally, any private management feels that if a boy is promoted from III form to IV form, it can get a larger income by way of fees, because the fee for IV form is much higher than that for III form and it is so with regard to V and VI forms also. When the boys come to the VI form, they

[Sri M. Narayana Kurup] [12th March 1955

are detained there and only the best boys are sent up for the examination because the management wants good results. So, if there is to be any examination for selection, it should not be held in VI form. Whoever comes to VI form should be allowed to sit for the examination and take his chance.''

(Deputy Speaker in the Chair.) Now.

SRI R. M. PALANIAPPAN :—" உதவி சபாநாயகர் அவர்களே கல்வி மந்திரி கொண்டு வந்திருக்கிற மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இப்போது இருக்கும் **Elementary education** நிலைமையானது, பள்ளிக்கூடத்தில் படிக்கும் குழந்தைகளுக்கு வாழ்க்கையில் பிரயோஜனடக்கூடியதாக இல்லை என்று நான் கருதுகிறேன். அதனால் அதை திருத்தி அமைக்க வேண்டியது மிகவும் அவசியமாக இருக்கிறது. சர்க்கார் அதற்காக டாக்டர் அழகப்ப செட்டியாரின் தலைமையின் கீழ் எந்த முறையில் **elementary education**-ஐ இனிமேல் நடத்துவது என்பதை தீர்மானிக்க போட்டிருக்கும் கமிட்டியை நாங்கள் எல்லோரும் முழுமனதுடன் வரவேற்கின்றோம். இந்தக் கமிட்டியும் சீக்கிரமாக அதனுடைய **report**-ஐ சமர்ப்பித்து, வரும் வருஷத்தில் அவர்கள் செய்திருக்கும் சிபார்சுகளின் படி புது விதமான **elementary education** அமுலுக்கு வரும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். மக்கள் எல்லோரும் எதிர்ப்பார்க்கிறார்கள். ஆனால் இதில் ஒரு முக்கியமான விஷயத்தை சர்க்கார் கவனிக்க வேண்டும். ஏனென்றால் அந்த **elementary education,** படிக்கும் பையன்கள் தங்கள் பிற்கால வாழ்க்கைக்கு, மிகவும் அவசியமானவற்றை தெரிந்துகொள்ள வேண்டிய நிலையிலிருக்க வேண்டும். இன்றைய நிலையில் இருக்கும் படிப்பு வாழ்க்கைக்கு சம்பந்த மில்லாத நிலையிலிருக்கிறது. இதோடுகூட நம் நாட்டிலே ஒரு பி.ஏ. படித்த மாணவன் **100** ரூபாய் சம்பளம்கூட வாங்க முடியாத அளவுக்கு கொடுமையான வேலையில்லாத திண்டாட்டம் இருக்கிறது. அதனால் பிள்ளைகள் வாழ்க்கையில் பயன் பெறுவதற்கு கைத்தொழில்கள் அதிகமாக ஏற்படுத்த வேண்டும். நம் நாட்டில் சோஷலிஸ **pattern of society**-ஐ ஏற்படுத்த வேண்மென்று காங்கிரஸ் தீர்மானித்து இருக்கிறது. அதை நாம் அமுல் நடத்தவேண்டுமென்றால் மிகவும் அதிகமான அளவுக்கு கைத்தொழில் இருக்கவேண்டும். அப்படி கைத்தொழில் இருக்கும் நாட்டில், கைத்தொழில் பயிற்சி அதிகமாக இருந்தால் தான், அவைகள் பெருக முடியும்.

" இரண்டாவதாக தனிப்பட்ட நபர்கள் நடத்தும் பள்ளிக்கூடங்களுக்கு சர்க்கார் ஆதரவு அதிகமாக இருக்கவேண்டும். ஆதரவு எந்த முறையில் கொடுக்கலாம் என்றால், பெரிய காலேஜ்கள் கட்டுவதற்கு தனிப்பட்ட நபர்களுக்கு **income-tax relief** கொடுத்தால் நன்றாக இருக்கும். அவர்களும் அப்போது ஊக்கத்தால் பல புது காலேஜ்கள் கட்டி, நாட்டில் எல்லோரும் படிப்பதற்கு வேண்டிய வசதிகளை செய்வார்கள் என்று நம்புகிறேன்.

" மூன்றாவதாக இப்பொழுது கலாசாலைகளில் படிக்கும் மாணவர்களுக்கு கட்டாயமாக ராணுவப் பயிற்ச்சி அளிக்கப்படவேண்டும். ஹைட்
12-35 p.m. ரோஜன் பாம், ஆட்டம் பாம் முதலியவைகள் உலகில் உலவிக்கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் நம் நாட்டிலே உள்ள ஜனங்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்வதற்கு தெரிந்துக்கொள்ள வேண்டியது அவசியம். காலேஜ் படிக்கும் மாணவர்களுக்கு கட்டாயமாக ராணுவப் பயிற்சி அளிப்பதன் மூலம் நாட்டுக்கு ஒரு சேவை செய்ய அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் ஏற்படுகிறது. ஆகவே காலேஜ் மாணவர்களுக்கு ராணுவப் பயிற்சி கட்டாயமாக அளிக்கப்படவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

" கைத் தொழில் பயிற்சிக்கு **Automobile Engineering** படிப்பதற்கு மினிமம் **educational qualification** எஸ்.எஸ்.எல்.ஸி. ஆக இருக்கிறது. சில மாணவர்களுக்கு படிப்பில் அக்கரை இருக்காது ; ஆனால் கைத்

12th March 1955] [Sri R. M. Palaniappan]

தொழில்களில் அக்கரை இருக்கும். அவர்களுக்கு **educational qualification** எஸ்.எஸ்.எல்.ஸி. என்று வைக்காமல் விதி விலக்கு அளித்து கைத்தொழில்களை பயிலுவதற்கு சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். இந்த நாட்டிலுள்ள ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கு நாம் கொடுக்கும் சம்பளம் போதவில்லை. அதனால் அவர்களின் நிலைமை மோசமாக இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு அதிகமான சம்பளம் கொடுக்க வேண்டியது அவசியம். அந்த வகையில் அவர்களுக்குத் திருப்தி இருந்தால்தான் அவர்கள் குழந்தைகளுக்கு பாடம் சொல்லிக்கொடுக்க முடியும். ஆதலால் அடுத்த பட்ஜெட்டில் பணக்காரர்களுக்கு இன்னும் கொஞ்சம் வரி போட்டாவது பணத்தை மிச்சப்படுத்தி ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு கொடுப்பதற்கு சர்க்கார் முயற்சிப்பார்கள் என்று எண்ணுகிறேன். அவர்களுடைய நிலைமை நன்றாகயிருந்தால்தான் எல்லாக் குழந்தைகளுக்கும் நிம்மதியாக படிப்புச் சொல்லிக்கொடுக்க முடியும்.

" அடுத்தபடியாக என்னுடைய தொகுதியிலுள்ள சில விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். புதுக்கோட்டை சமஸ்தானமாக இருந்தபோது அங்கு அநேக பள்ளிக்கூடங்கள் இருந்தன ; இப்பொழும் இருந்துக் கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் பள்ளிக்கூடங்கள் சரியாக நடத்தப் படுவதில்லை என்று புகார் சொல்லுகிறார்கள். சில கிராமங்களில் ஒழுங்காக நடந்து வருகின்றன. தனிப்பட்டவர்கள் நடத்தும் பள்ளிக்கூடங்கள் மிகவும் நன்றாக நடந்து வருகின்றன. சிறு சமஸ்தானமாக இருந்தாலும் அங்கு தனிப்பட்டவர்கள் நன்றாக பள்ளிக்கூடங்கள் நடத்துவதற்கு அந்த சர்க்கார் ஆதரவு கொடுத்துவந்தார்கள். தனிப்பட்டவர்கள் நடத்தும் பள்ளிகளுக்கு என்ன சலுகைகளை சமஸ்தானமாக இருந்தபோது கொடுக்கப் பட்டதோ அதே சலுகைகளை இந்த சர்க்காரும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

SRI A. VELOO :—" கனம் சபாநாயகர் அவர்களே, இப் போது சபை முன்பாக இருக்கும் கல்வி மான்யத்தைப்பற்றி கொண்டுவரப் பட்டுள்ள வெட்டுப்பிரேரேபணையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல 12-40 p.m. முன் வந்துள்ளேன். மக்களின் வாழ்க்கை முன்னேறவும், அறியாமை நீங்கவும், ஜனநாயகம் வெற்றி பெறவும் கல்வி முக்கியமானது. இந்தக் கல்வியை எல்லோருக்கும் கொடுத்தால்தான் நம்முடைய ஜயநாயகம் வெற்றி பெறமுடியும் என்பதை அறிந்து நம்முடைய அரசியல் சட்டத்திலும் 14-வது பிரிவில் இந்நாட்டிலுள்ள ஆண் பெண் அத்தனைபேருக்கும் ஜாதி மத வித்தியாச மின்றி கல்வி போதிக்கப்பட வேண்டுமென்று இருப்பதை அனுசரித்து முதல் முதல் நமது ராஜ்யத்தில் ஜாதி மத வேறுபாடின்றி எல்லோருக்கும் முதல் படிவத்திலிருந்து 3-வது படிவம் வரையிலும் (எட்டாவது வகுப்பு) கல்வி பயில வசதி அளித்திருப்பது, நமது ராஜ்யம் மற்ற ராஜ்யங்களுக்கு வழிகாட்டியாக இருக்கின்றது என்பதைக்குறித்து பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

" இந்தக் கல்வி மான்ய கோரிக்கை சம்பந்தமாக பேசும்போது, கனம் அங்கத்தினர் அனந்தபாய் அவர்கள் குறிப்பிட்டார்கள், ' ஆசிரியர்களாக வருகிறவர்கள் முதலில் மற்றெல்லா வேலைகளிலும் முயற்சி செய்து பார்த்துவிட்டு அவைகளில் ஒன்றும் கிடைக்கவில்லை என்றால் கடைசியாக இந்த ஆசிரியர்கள் வேலைக்கு வருகிறார்கள். ஆசிரியர் வேலைக்கும் **(Competitive examination)** பரீட்சை வைத்து தகுதியானவர்களையே தேர்ந்து எடுக்க வேண்டும்' என்று. சர்வீஸ் கமிஷன் பரீட்சை எழுதுபவர்கள் பரீட்சையில் சரியானபடி பதில் அளிப்பதில்லை என்றும் அவர்களின் தரம் குறைந்திருக்கிறது என்றும் **Public Service Commission report** கூறுகிறது. ஆசிரியர்களாக வருகிறவர்களுக்கும் ஒரு பரீட்சை நடத்தி அவர்களை எடுக்கவேண்டுமென்றால், ஆசிரியர்கள் வேலையில் ஈடுபடுகிறவர்களின் சம்பளம் மிகவும் குறைவாக இருப்பதனாலும், கவர்ச்சிகரமாக இல்லாததினாலும், ஆசிரியர் பணியாற்றுவதற்கு ஆர்வம் கொண்டுள்ளவர்கள் முன் வருவதில்லை. சம்பளம் மிக மிகக் குறைவாக இருக்கின்றது. ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்தி வருங்கால

[Sri A. Veloo] [12th March 1955

பெரியோர்களாகிய நமது இளங்குழந்தைகளை நல்ல வழியில் நடத்தி அறிவு புகட்டும் ஆசிரியர்கட்கு ஊக்கம் அளிக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

" கல்வியானது தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கும் இடங்களிலும் பிற்பட்ட மக்கள் வசிக்கும் இடங்களிலும் பரவாமல் இருந்து வருகிறது. சர்க்கார் இவ்விதமாக இலவசக் கல்வி அளிக்கிறார்கள் என்பதுகூட அவர்களுக்குத் தெரிவதில்லை. ஆதலால் சர்க்கார் இவ்விஷயத்தில் நன்றாக பரிசீலனை செய்து கல்வி அதிகாரிகளின் உதவியையும் கொண்டு இப்படிப்பட்ட இடங் களில் கல்வி பரப்புவது எப்படி என்று யோசிக்க வேண்டும். தாழ்த்தப் பட்டவர்களிடையே கல்வியின்மையை போக்குவதற்கு முயற்சியும், பரப்பு வதற்கு முக்கியத்துவமும் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன். பிரசாரக் குழு ஒன்றை சர்க்கார் ஏற்படுத்தி ஆங்காங்கே கிராமாந் திரங்களில் சென்று பிரசாரம் செய்யவும், குழந்தைகளைப் பள்ளிக்குக் கூட்டிக்கொண்டு வரவும் ஷெ குழு பொறுப்புள்ளதாக்கப்படவேண்டும்.

" வெளிநாடுகளிலே ஆங்காங்கே வசிக்கும் குழந்தைகளை பள்ளிக் கூடத்திற்கு அழைத்துவருவதற்காக வாகன வசதிகள் ஏற்படுத்தியிருக் கிறார்கள். ஆசிரியர்களும் ஊர் ஊராகச் சென்று கல்விப் பயிற்சி அளிக் கிறார்கள் என்று கேள்விப்படுகிறோம். நம் நாட்டிலும் இம்மாதிரி வசதி கள் ஏற்படுத்தினால் மிகவும் நன்றாக இருக்கும். பொருளாதார நெருக் கடியின் காரணமாக அரசாங்கம் இதையெல்லாம் செய்ய முடியாவிட்டாலும் பிரசாரக் குழுவையாகிலும் ஏற்படுத்தி கல்வியில் ஊக்கம் அளிப் பதற்கும், கல்வியைப் பரப்புவதற்கும் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

" அடுத்தபடியாக தமிழுக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பதாக நமது அரசாங்கம் சொல்லிக்கொண்டுவருகிறார்கள். ஆனால் தமிழ் ஆசிரியர் களின் நிலைமை மிகவும் மோசமாக இருப்பது வருந்தத்தக்கதாயிருக்கிறது. அவர்களுக்கு சம்பள உயர்வு அளிக்கப்படவேண்டும் என்றும் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்றும் பேசப்பட்டுவருகிறதே தவிர நடைமுறையில் ஒன்றும் நடக்கவில்லை. தமிழாசிரியர்கள் சம்பந்தமாக **1954**-ம் வருஷம் ஜனவரி மாதம் **7**-ம் தேதி கல்வி மந்திரி அவர்களிடத் தில் நான் ஒரு மெமோராண்டம் கொடுத்தேன். **G.O. No. 526, Education, dated 15th March 1948,** சர்க்கார் உத்தரவுப்படி மொழி ஆசிரியர்களின் **(Tamil Pandits)** சம்பள விகிதம் மாற்றியமைக்கப்பட்டது. **(Revised the scales of pay of Tamil Pandits).** இந்த உத்தரவுப்படி எல்லாத் தமிழாசிரியர்களும் அவர்கள் உயர்நிலை வகுப்புகளுக்குப் பாடம் போதித் தாலும் மத்தியதர வகுப்புகளுக்குப் பாடம் போதித்தாலும் சம்பளம் மாற்றியமைக்கப்பட்டது. **(In pursuance of that G.O., all the Tamil Pandits were paid salaries whether they handle High school forms or Middle school forms or both.)** அதன் பிறகு 1949-ம்ஞு பிப்ரவரிமீ 11உ, **G.O. No. 355, Education, dated 11th February 1949,** பிரகாரம் சர்க்கார், மாற்றியமைக்கப்பட்ட சம்பளம் **(revised scales of pay)** உயர் நிலை வகுப்புகளுக்குப் போதிக்கும் தமிழாசிரியர்களுக்கு மாத்திரம் தான் என்றும் மத்தியதர வகுப்புகளிலும் உயர் நிலை வகுப்புகளிலும் போதிப்பவர்களுக்கு இல்லையென்றும் விளக்கம் கொடுத்தார்கள். இப் படிப்பட்ட விளக்கக்குறைவினால் ஏற்பட்ட தகராறுகளினால் பொதுவாக ஸ்தல ஸ்தாபனங்களிலும் ஜில்லா போர்டு பள்ளிகளிலும் வேலைப் பார்த்து வந்த தமிழாசிரியர்களும் குறிப்பாக மாயூரம் கூறை நாடு உயர் நிலைப் பள்ளிகளில் வேலை பார்த்த தமிழாசிரியர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார் கள். சம்பளப்பிடித்தத்தை சர்க்கார் மறு உத்தரவு போடும் வரை யிலும் நிறுத்த வேண்டுமெனக் கோரியும் **G.O. No. 422, Education, dated 1st March 1952,** படி பரிகாரமளிக்காமலும் மாயூரம் நகர சபையில் வேலை பார்க்கும் தமிழாசிரியர்களின் சம்பளப் பிடித்தம் நடந்து கொண்டே வருகிறது. அவர்களுடைய முறையைப்பற்றி கனம் நிதி அமைச்சர் அவர்களிடம் கூறியிருந்தும் எக்காரணத்தாலோ, தமிழாசிரியர்கள் என்பதனால்தான் என்னவோ, குறைகள் நிவர்த்திக்கப் படாதது மிகவும் வருந்தத்தக்கதே. ஆகவே தமிழாசிரியர்களின் நிலை உயர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

12th March 1955] [Sri A. Veloo]

" ஆசிரியர் பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட கிரேடு படி அந்தந்த கிரேடு ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கப்படவில்லை. சர்க்கார் உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு ஒரு கிரேடு, பிரைவேட் மானேஜ்மெண்டில் இருக்கும் உபாத்தியாயர்களுக்கு ஒரு கிரேடு சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது. இதை ஒழிக்க வேண்டும். மானேஜ்மெண்ட் பள்ளிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்களுடைய சம்பளம் சரிவரக் கிடைக்கா காததனால் ஆசிரியர்களிடம் நேரடியாக சர்க்காரே ஊதியத்தைக் கொடுப் பதற்கு ஏற்பாடு செய்தால் மிகவும் நலமாக இருக்கும். அந்த முறையை அமுலாக்குவதற்கு ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொள்ளுவதோடு, ஒரே கிரேடு (**Grade**) ஆசிரியர்களுக்கு, அவர்கள் வேலை பார்க்கும் ஸ்தாபனத்தைக் கவனியாமல், ஒரே விதமான சம்பளம் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டு மாயும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

" மாயூரத்திலே ஒரு கல்லூரி ஏற்படுத்த வேண்டுமென்று கடந்த இரண்டு மூன்று வருஷங்களாக முயற்சி செய்யப்பட்டு வருகிறது. மாயூரம் அன்பனாதபுரம் தர்மபாகத்திலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் முன்பணமாக வைத்துக் கல்லூரி ஆரம்பிப்பதற்கு வேண்டிய முயற்சிகளை யெல்லாம் செய்தும், கல்லூரி கட்டுவதற்கு இட வசதியை தருமபுர ஆதினம் கொடுத்து உதவவும் முன்வந்துள்ளார்கள். ஷி கல்லூரியை ஆரம்பிப்பதற்கு இன்னும் அரசாங்கம் அனுமதி தராமலிருந்து வருகிறது. இந்தப் பள்ளிக்கூட ஆண்டிலாவது (1955–56) மாயூரத்தில் கல்லூரி (**College**) ஆரம்பிப்ப தற்கு அனுமதி கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

* SRI P. SELVARAJ :—" Mr. Deputy Speaker, Sir, ever since the dawn of freedom in our country, political thinkers and educationists are evincing keen interest to introduce a rational system in education. The concensus of public opinion is that our present system is an outmoded and stereo-typed one. We all know that this present educational system is a relic of the British Raj. It was formulated to serve an alien ruler, who happened to be the Britisher. In a way the policy has supplied the demand of the people by producing quill-drivers. We are now feeling that we have been unnecessarily kept up in a policy which did not give us full freedom and which only taught us servitude. Again the present method creates only the feudal class system. Therefore our politicians have come to shun this policy and they want to introduce a rational system. Apart from getting rid of the old trends in our educational policy, the time has come when we have to develop the mentality of our children. I am glad that the public mind has awakened to a great extent and that they want a rational system to be followed in regard to education of our children. Therefore any system that introduces changes in our educational system should be carefully considered.

" We are aware that the present elementary education system is undergoing some examination by an expert committee. We all know that the Secondary Education Commission has submitted its report and that it is under the consideration of Government, though it is in an embroynic stage.

" In imparting elementary education care must be taken to develop the brain of the child, and thereby to improve its idea of perception. Sir, at the same time children must be given free scope to improve their originality and their physique also. On

[Sri P. Selvaraj] [12th March 1955

those lines, the educational curriculum should be drawn up to have the desired effect. The secondary school stage is a stage where the pupil comes after finishing the primary stage and he would have developed such a mentality by then that we could introduce the occupational system there. When I say occupational system, I mean the basic system of education. I know for instance in certain elementary schools, basic education is not taught properly and children are too small and tiny to handle the instruments. So therefore the proper age for introducing the occupational system is 12 to 16 and that will be useful to the boys in the sense they could also use the skilled labour for their future life. In this connexion I support the policy of the Secondary Education Commission in extending the High school course by one year. By extending it by one more year, the parents would be able to come to the conclusion whether to send their children to the arts course or the
12–50 p.m. professional course. Bearing this in mind, we have to start various schools to impart technical education. Students studying in these institutions after leaving them can utilize their brain in the technical field and be of use to the country.

"Coming to college education, I would like to point out that knowledge should be the main object of University education. It is not meant for utilitarian purpose.

"A nation is judged by the character of its citizens. Therefore, character training should play a predominant role in the school or college course. At present, there is a tendency towards democratization. So, students in schools and colleges sometimes revolt against the authorities. That sort of democratization should be discouraged."

12–52 p.m. SRI M. PALANIANDI:—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கல்வி மான்யத்தின்கீழ் கொண்டுவந்துள்ள வெட்டுப் பிரேரபணையை ஆதரித்தாலும், அதே சமயத்தில் முதலாவதாக நமது கல்வி மந்திரி அவர்களைப் பாராட்ட வேண்டிய நிலைமையில் இருக்கிறேன். ஏனென்றால் எட்டாவது பாரம் வரையில் இலவசக் கல்வி வசதியளிக்க முன்வந்துள்ளார். அதே சமயத்தில் மற்றொன்றையும் சொல்ல விரும்புகின்றேன். எல்லோருக்கும் கல்வி முக்கியமானது என்பதை யாருக்கும் சொல்லவேண்டியதில்லை. ஆகவே ஏழைக் குழந்தைகளுக்கெல்லாம் பத்தாவது வரையிலாவது இலவசமாகக் கல்வி வசதியளிக்க முன்வர வேண்டும். அப்படி என்று முன்வருகிறார்களோ அன்றுதான் இந்த அரசாங்கத்தில் சோஷியலிஸ பாணியில் சமுதாயத்தை அமைக்கும் **(Socialistic pattern of Society)** முயற்சி உருவாயிற்று என்று சொல்ல முடியும். ஆகவே பிற்பட்ட இனத்துக் குழந்தைகளுக்கும், தாழ்த்தப்பட்ட இனத்துக் குழந்தைகளுக்கும், கிறிஸ்துவர்களாக மாற்றப்பட்ட தாழ்த்தப்பட்டவர்களின் குழந்தைகளுக்கும் பத்தாவது வரையிலாவது இலவசக் கல்வி கொடுக்கவேண்டுமென்பதை வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறேன். அதை மந்திரியார் அவர்கள் விரைவில், அதாவது அடுத்த ஆண்டிலாவது நடைமுறைக்குக் கொண்டுவரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

"அடுத்து, நமது கல்வி முறையைப்பற்றித் தெரிந்து கொள்ளவேண்டும். பல அன்பர்கள் அதுபற்றிப் பேசினார்கள். இன்றிருக்கும் கல்வி முறையை மாற்றியமைக்க வேண்டுமென்று பேசப்பட்டு வந்தது. ஆனால் அது மாற்றப்படவில்லை. கமிஷன்கள் எல்லாம் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் எதுவும் நடைமுறையில் உடனடியாக ஒன்றும் செய்ய

12th March 1955] [Sri M. Palaniandi]

வில்லை. ஆகவே அவைகளைச் சீக்கிரம் அமைக்காவிட்டால், இன்றிருக்கும் மாணவர்களின் தரம் இன்னும் மோசமான நிலைக்குப் போய்விடும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

"இப்போது சட்ட சபையில் கனம் கல்வி மந்திரி அவர்கள் ஆதாரக் கல்வியை இந்த மாகாணம் பூராவும் பரப்பப் போவதாகக் கூறினார்கள். ஆனால் இப்போது எனக்குமுன் பேசிய நண்பர் செல்வராஜ் அவர்கள், இந்த ஆதாரக் கல்வி முறை எங்கெல்லாம் அமுலில் இருக்கிறதோ, அங்கெல்லாம் பெரும்பாலும் மாணவர்களால் சாமான்களை தூக்கக்கூட யோக்கியதை இல்லாமல் இருக்கிறார்கள் என்று கூறினார். ஆனால் கன யந்திரத் தொழில், மின்சாரம் போன்றவைகளில் மாணவர்களைப் பயிற்சி விக்க வேண்டியது முக்கியமானது. வெறும் நூல் நூற்றல், கைத்தறித் தொழில் ஆகியவைகளை மட்டும் சொல்லிக் கொடுப்பதால் அவர்களுடைய வாழ்க்கையை உயர்த்திவிடவோ, மாற்றிவிடவோ முடியாது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். ஆங்காங்கு இருக்கும் ஆலை முதளாளிகள் தங்கள் ஆலைகளில் அந்தந்த ஊரிலுள்ள மாணவர்கள் சிலரைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்குத் தங்கள் ஆலைகளில் பயிற்சியளித்து, ஆக்க வேலையில் அவர்களைத் திறமை மிக்கவர்களாகச் செய்யவேண்டும் என்று செகண்டரி ஸ்கூல் கமிட்டியில் முடிவு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இக்கமிட்டியில் முக்கியமாக தொழில் நுணுக்க **(Technical)** வேலைக்கு இடந்தர வேண்டும். ஏதோ காந்தியடிகளின் திட்டம் என்பதற்காக, அதை நடைமுறையில் கொண்டுவந்து, மாணவர்களை இன்னும் கீழ் நிலைக்குக் கொண்டுபோக வேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

"இன்று கல்வி முறை எப்படி இருக்கிறது என்று பார்ப்போம். மேல் சபையில் கனம் கல்வி மந்திரி அவர்கள் சீக்கிரத்தில் பல்கலைக் கழகத்திற்கு தாய்மொழியில் பாடங்கள் நடத்துவது குறித்து தாக்கீது அனுப்பப்போவதாக பேசினார்கள். நல்லதுதான். ஆனால் அவ்வாறு நடத்தப் போகிறார்களா என்பது சந்தேகம். இன்று எஸ்.எஸ்.எல்.ஸி. வரை தமிழில் படித்துவிட்டு, அம்மாணவன் கல்லூரியில் போய்ச் சேர்ந்ததும், அங்கு எல்லாம் ஆங்கிலத்தில் இருப்பதைக்கண்டு மிரளுகிறான். முதல் வருஷ ஆரம்பத்திலேயே **(I.U.C.)** கல்லூரியில் அவர்களுக்கு ஷேக்ஸ்பியர் வசனம், பாட்டு முதலிய பல பாடப் புத்தகங்கள் இருப்பதைக் கண்டு அவனால் ஒன்றும் படிக்க முடிவதில்லை. காரணம் இப்போது 5-வது வகுப்புக்கு மேல்தான் ஆங்கிலமே சொல்லித்தரப்படுகின்றன. உபாத்தியாயர் சொல்லிக் கொடுப்பதைக்கூட கல்லூரியில் அவனால் புரிந்துகொள்ள முடிவதில்லை. அந்த நிலையில்தான் இன்றுள்ள கல்லூரியின் தரமிருக்கிறது. ஏன், பத்தாவது வகுப்பில் சொல்லிக்கொடுப்பதையே பலருக்குபுரிந்து கொள்ள முடிவதில்லை? அதில் என்ன இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளாமலேயே, நெற்றுப்பண்ணிக்கொண்டு ஏதோ கேள்விகேட்பதற்கு விடை எழுதும் அளவில்தான் இன்று மாணவர்கள் இருக்கிறார்கள். துணைக்கு நோட்ஸ் வேறு அவர்களுக்கு உதவிக்கு இருக்கிறது. புத்தகங்களிலுள்ள உண்மையான செல்வங்களைப் புரிந்துகொண்டு, தங்களுடைய எண்ணங்களைத் தெளிவாக அவர்களால் எடுத்துரைக்க முடிவதில்லை. அந்த நிலைமையைத்தான் நாம் இன்று மாணவர்களிடையே பார்க்கின்றோம். செகண்டரி கல்வி முறைக்கும், எலிமெண்டரி கல்வி முறைக்கும் உள்ள வித்தியாசம் பெருங்கடலுக்கும், சாதாரண சிறு குட்டைக்கும் உள்ள வித்தியாசம் போல்தான் இருக்கிறது.

"அடுத்து, மீடியம் பிரச்னை யெழுகிறது. தமிழிலேயே சொல்லிக் கொடுப்பதா அல்லது ஆங்கிலத்திலேயே சொல்லிக் கொடுப்பதா என்ற தகராறு இருந்துவருகிறது. தமிழ்தான் வேண்டுமென்று சொல்லப்பட்டு வருகிறது. ஆனால் அது இன்னும் நிறைவேற்றப்பட முடியவில்லை. அதையும் உடனடியாக முடிவு செய்தாக வேண்டும். சுதந்திரம் வந்துவிட்ட பிறகும், ஏதோ கமிட்டிகள் போடுகின்றோம், அவர்கள் முடிவு சொல்வார்கள் என்று யோசித்துக்கொண்டும், காலங் கடத்திக்கொண்டுமிருந்தால், நம் நாட்டின் வருங்காலச் செல்வங்கள், இந்நாட்டில் இரத்தினங்கள் என்று சொல்லப்படும் மாணவர்கள் இன்னும் மோசமாக நலிந்துகொண்டே

[Sri M. Palaniandi] [12th March 1955

போவார்கள். அதை உடனடியாகச் செய்யவேண்டும். தமிழிலே எல்லாப் பாடங்களேயும் நம்மால் நடத்த முடியும். எல்லா விஷயங்களேயும் எடுத்துச் சொல்லும் ஆற்றல் தமிழுக்கிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. எந்த விஷயமானுலும் சரி, அது இலக்கியமாக இருக்கட்டும், பௌதிகமாக இருக்கட்டும் தமிழிலே அழகாக எடுத்துச் சொல்ல முடியும். ஆகவே தமிழிலே நடத்த உடனடியாக முயற்சிகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"இன்னெரு முக்கியமான விஷயத்தை கவனிக்க வேண்டும். எஸ்.எஸ்.எல்.ஸி. மாணவர்கள் பாஸ் செய்துவிடுகிருர்கள். அப்படி பாஸ் செய்யும் மாணவர்களின் எஸ்.எஸ்.எல்.ஸி. புத்தகங்களில் கல்லூரி படிப்புக்கு தகுதியுள்ளவன் **(eligible for college course)** என்று டி.பி.ஐ. சிலிருந்து முத்திரையிட்டு புத்தகம் வழங்கப்படுகிறது. அப்படிப்பட்ட மாணவன் தமிழிலே நிறைய மார்க்கு வாங்கியிருக்கக்கூடும்; ஆனல் அவன் ஆங்கிலத்திலே 34 வாங்கித் தேர்வுற்றிருந்தாலும், அந்தப் பையன் முனிசிபாலிடி வேலேக்குப் போவதற்குக்கூட யோக்கியதையற்றவன் என்று சொல்லப்படுகிறது. இதனல் வேலே கிடைக்காது பல மாணவர்கள் ஏழ்மையின் காரணமாக ஆண்டுதோறும் கிணற்றில் வீழ்ந்து இறப்பதும், தூக்குப் போட்டுக்கொள்வதுமாகிய நிலேமைதான் ஏற்படுகின்றது. மாணவர்கள் பாஸ் செய்தாலும், வேலே கிடைக்க முடியாத நிலேமையைத்தான் இன்று ஏற்படுத்தியிருக்கிறது. தமிழிலே நிறைய மார்க்கு வாங்கியிருப்பான்; விஞ்ஞானத்திலே நிறைய மார்க்கு வாங்கியிருப்பான்; கணக்கிலே, இன்னும் மற்ற பொருள்களிலே அதிக மார்க்கு வாங்கியிருப்பான். அதோடு கல்லூரிப் படிப்புக்கு தகுதியுள்ளவன் என்றும் பட்டம் பெற்றிருப்பான். இருந்தாலும் ஆங்கிலத்தில் குறைவாக வாங்கியிருக்கிறுன் என்ற காரணத்திற்காக வேலேக்குச் செல்ல அவனுக்கு அதிகாரமில்லே. இதைப் பார்க்கும்போது சர்க்கார்மீது ஒரு கேஸ்கூட போடலாம் என்ற எண்ணம் ஏற்படுகிறது. இதை அரசாங்கம் யோசித்தாகவேண்டும். அதோடு இதை மாற்றியமைக்கவும் முன்வரவேண்டும்.

"எட்டாவது வகுப்பிற்கு மேலுள்ள வகுப்புகளுக்கு ரிக்கார்டுகள் வைக்கப்படுகிறது. அம்முறை ரொம்ப நல்லதுதான். ஆனல் அதற்குக் கீழுள்ள வகுப்புகளுக்கு அம்மாதிரியான ரெக்கார்டுகள் வைப்பதில்லே. ஏன் அந்தப் பாகுபாடு? இதனல் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. மிடில் ஸ்கூல்களில் இதனல் பல புரட்டுகள் செய்யப்படுகின்றன. ஆகவே ஊழல்களுக்கு இடமில்லாமல் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"கலாச்சாரத்தைப்பற்றி நமது கல்வி மந்திரி அவர்கள் குறிப்பிட்டார்கள். கலாச்சாரத்தை எடுத்துக்கொண்டால், நம் நாட்டில் ஓரளவு நகரங்களில் கலாச்சாரம் வளர்க்கப்படுகின்றதே தவிர, நாட்டுப்புறங்களுக்கு ஏற்ற கலாச்சாரத்தை வளர்க்கவேயில்லே. அவர்களுக்குத் தேவையான நாட்டுப் பாடல்கள் முதலிய பல நிகழ்ச்சிகளே நடத்த முன்வரவேண்டும். ஏதோ மியூசிக் அகாடமியை ஏற்படுத்திவிட்டால் மட்டும் போதாது. அல்லது கோகலே ஹாலிலே சங்கீத நிகழ்ச்சியை நடத்திவிட்டாலும் போதாது. நாட்டு மக்களுக்கு, முக்கியமாக கிராமப்புறத்திலிருக்கக்கூடிய மக்களுக்கு வேண்டிய நல்ல சங்கீதமும், கலேயும் ஏற்படுத்த அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

1 p.m. * Sri M. R. RAMACHANDRAN :—" Mr. Deputy Speaker, Sir, I am really glad that the Hon. Minister for Education has tackled the problem of education in a very courageous manner by referring in his speech to the progress made in several directions in spite of the criticisms that are being made on the other side of this House. Sir, at every stage the Government have been coming forward to formulate certain policies with regard to elementary education in particular and education in general. But, at the same time, any attempt to reform the present educational system, with the existing social inequalities from which we are suffering, is viewed with suspicion. It is only in that light that we have

12th March 1955] [Sri M. R. Ramachandran]

to consider the criticisms that are levelled against some of the schemes which have been introduced by the Government so far. So, I appeal to them that, along with the educational reforms, the existing social order may be changed and the economic condition of all classes of people in this State may be improved and they should bestow their immediate attention to these matters. If we do that, it will go a long way in successfully implementing the educational reforms of elementary education or secondary education or collegiate education.

" Now coming to the actual problems connected with education and educational institutions which are under the management of the Government or municipalities or local bodies, I have to state that there is lack of understanding between the authorities governing these institutions and the Government. In this connexion, I am particularly referring to the educational institutions run by district boards. A district board is maintaining 700 to 800 schools with a strength of nearly 2,000 to 3,000 teachers. We all know that the Education Department is supposed to exercise control over them and the inspecting officers of the Department are supposed to inspect these schools and check the registers maintained by the school authorities. But in our experience we find that the entries made there are contrary to facts. For instance, there are schools with a strength of only 8 or 9 students but still such schools are allowed to be run by the district board. In spite of the over-all control of the Government and the inspection of Deputy Inspectors of Schools, such schools are allowed to exist and are not closed. If these schools are closed, there will be some saving to the Government and I cannot understand why such a state of affairs should continue to exist even now.

" Then with regard to appointment of teachers or opening of schools, in some cases the district board straightaway appoint teachers but in several other cases they refer the matter to the Divisional Inspector of Schools. I cannot understand why even for the mere opening of a school or appointing a teacher, it should be referred to him and it could be easily decided by the district board by itself or by the District Educational Officer individually or in consultation with the board instead of referring it to the Divisional Inspector of Schools. By referring it to him, we are only dealing things and several persons are affected by it. In this connexion, I would say that there is no justification for continuing the posts of Divisional Inspector of Schools because their work is being attended to either by the District Educational Officer or the district board or the Deputy Director of Public Instruction or sometimes even by the Director of Public Instruction. In my opinion, as a measure of economy, these posts should be abolished as soon as possible.

" Then I come to the policy enunciated by the Government with regard to imparting education to adults. As explained by the Hon. Minister for Education, we must prevent adults from falling into illiteracy by compelling or asking them to go to adult schools.

[Sri M. R. Ramachandran] [12th March 1955

But, at the same time, we must offer something in return to every adult who completes his course in these schools. In this connexion, I have a suggestion to make to the Government. As an incentive to these adults interesting themselves in entering a school and getting education, we must show some concession to them by taking them as coolies as soon as they come out of the school. They should be given preference over uneducated coolies who apply for a job. Then only they will be interested in getting education from these schools. Some such classification or distinction or preference should be given to persons who join these adult schools and attend classes regularly.

"Then coming to the medium of instruction in schools and colleges various hon. Members expressed their opinions on this subject. There is a lot of confusion in respect of this matter, whether it should be in English or in a vernacular language. There is no trouble as far as education up to VI form is concerned, but when it comes to the Intermediate stage, all this confusion arises. It is only there that the students are face to face with the works of Shakespeare and Milton which they cannot understand. That is a matter which requires a lot of thinking and that is where confusion must be avoided. I think that for some more time the existing state of affairs should be allowed to continue till things shape by themselves and we should not enforce a particular policy in respect of this matter and create more confusion . . ."

DEPUTY SPEAKER :—" The hon. Member's time is up.

Sri M. R. RAMACHANDRAN :—" With these words, I conclude my speech."

1–06 p.m. * **Sri M. P. SUBRAMANYAM** :—" கனம் துணைத்தலைவர் அவர்களே, சென்னை அரசாங்கம் கல்வி இலாகாவிற்கு அரசாங்க மொத்த வருமானத்தில் ஏறக்குறைய ஐந்தில் ஒரு பங்கு ஒதுக்கியிருப்பதைக் கண்டு மகிழ்ச்சியே. ஆனால் பெருந்தொகை செலவிடப்படக்கூடிய முக்கியத்வம் வாய்ந்த இந்த இலாகாவிற்கு ஒரு தனி அமைச்சர் இல்லாமல் இருப்பது வருந்தக்கூடியதாக இருக்கிறது. இப்பொழுது இருக்கும் கல்வி அமைச்சர் அவர்கள் கல்வியில் திறமையுள்ளவர்களாகவும், கல்வியில் பற்றுடையவராகவும் ஆர்வம் உள்ளவராகவும் இருந்தபோதிலும், அவரது எண்ணம் திறமை ஆற்றல் முழுவதும் கல்வி இலாகாவிற்கு செலவிட முடியாமலிருக்கிறார். அதனால் கல்வி இலாகாவிற்கு தனி அமைச்சர் அவசியமென்பதை வலியுறுத்துகிறேன்.

" கடந்த சில ஆண்டுகளாக பள்ளிக்கூடங்களில் பாடத் திட்டங்கள் தாய்மொழியில் கற்பிக்கப்படவேண்டுமா அல்லது ஆங்கிலத்தில் கற்பிக்கப்படவேண்டுமா என்று இரண்டுவித அபிப்பிராயங்கள் இருந்துவருகின்றன. ஆரம்ப, நடுநிலை பள்ளிகளில் வட்டார மொழியே போதனா மொழியாக ஆக்கப்பட்டுவிட்டது. மிகவும் மகிழ்ச்சிக்குறியதே. ஆனால் கல்லூரிகளில் பாடங்கள் கற்பிக்கும் மொழி ஆங்கிலமாகவே இருந்துவருகிறது. கல்லூரிகளிலும் தாய்மொழியே போதனாமொழியாக இருக்கவேண்டுமென்று ஒரு சாராரும், நல்ல அறிவு பெறுவதற்கும் உலகத்துடன் தொடர்பு வைத்துக் கொள்வதற்கும் ஆங்கிலமே சிறந்ததாகையால் அதுவே போதனாமொழியாக நீடிக்கவேண்டுமென்று மற்றொரு சாராரும் வற்புறுத்திவருகிறார்கள். புதிய முற்போக்கு கருத்துக்களையும், விஞ்ஞான வளர்ச்சியின் கண்டுபிடிப்புகளை அறிந்துகொள்வதற்கும் ஆங்கில மூலமாகத்தான் முடியுமென்று

12th March 1955] [Sri M. P. Subramanyam]

கருதுவது தவறு. மொழிபெயர்ப்பால் அறிந்துக்கொள்ள முடியும். உலக விவகாரங்களில் நாம் கலந்துக் கொள்வதாக இருந்தாலும உலக முன்னேற்றத்திற்கு நம் பங்கை செலுத்துவதாக இருந்தாலும் ஆங்கில மொழிதான் சிறந்த கருவி என்று எண்ணுவதற்கில்லை. அதற்காக கல்லூரி போதனமொழி ஆங்கிலமாகவே நீடிக்கப்படவேண்டுமென்பதும் அவசியமில்லை. நடைமுறையில் பார்த்தால் சக்தி வாய்ந்த அரசுகளான ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் தங்கள் கருத்துக்களை தங்கள் நாட்டு மொழியிலேயே நன்றாகவும் திறமையாகவும் உலக விவகார குழுக்களில் தெரிவிக்க முடிகிறது. மொழிபெயர்ப்பாளர்கள் இருக்கிறார்கள். அவர்களின் கருத்துக்களை வெளிநாட்டவர்கள் தெளிவாக புரிந்துகொள்ளாமலில்லை. அப்படியிருக்க நாம் மட்டும் ஆங்கிலத்தில் எடுத்துக்கூற முடியுமென பிடிவாதம் செய்வதும், கல்லூரிகளில் ஆங்கிலமே போதன மொழியாக இருக்கவேண்டுமென்று சொல்வதும் புரிந்துகொள்ள முடியாத ஒன்றாக இருக்கிறது. ஆங்கிலம் அவசியம் கற்றுக்கொள்ளப்படவேண்டியதாக இருந்தாலும் போதனமொழியாக இருக்கவேண்டியதில்லை. வட்டார மொழியிலேயே—தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் கல்லூரிகளில் பாடம் கற்பிக்கப்பட்டால் எளிதாகவும், ஆங்கிலத்தை நன்றாக புரிந்து கொள்வதற்காக செலவழிக்கப்படும் காலத்தை தவிர்க்கும் கருத்துக்களை மாணவர்கள் தெரிந்துகொள்ளமுடியும். இதை அரசாங்கம் உடனடியாக முடிவு செய்யவேண்டுமென கூறிக்கொள்கிறேன்.

" **1948**-லிருந்தே உயர்நிலை பள்ளிகளில் தமிழ் முதன் மொழியாக **(First language)** கருதப்பட்டு வருகிறதென கல்வி அமைச்சர் கூறினார். தமிழ் முதன் மொழியாக அப்பொழுதிருந்து கருதப்பட்டு வந்திருந்தபோதிலும்கூட தமிழ் ஆசிரியர்கள் மற்றத்துறை ஆசிரியர்களோடு சமமாக நடத்தப்படுவதில்லை. தமிழ் ஆசிரியர்களுக்கு மற்றவர்களுக்கு கொடுப்பது போல் ஊதியம் சமமாக கொடுக்கப்படுவதில்லை. தமிழ்மட்டும் படித்து பட்டம் பெற்ற ஒருவரையும் இதுவரையில் உயர்நிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டதுமில்லை அல்லது தலைமை ஆசிரியராக இருப்பவர்கள் ஒவ்வொருவரும் தமிழில் குறிப்பிட்ட அறிவு உடையவராயிருக்க வேண்டுமென்ற நிபந்தனையும் விதிக்கப்படவில்லை. ஆகவே அரசியலார் உண்மையாகவே தமிழுக்கு முதன்மையிடம் உயர்நிலை பள்ளிப்பாடத் திட்டத்தில் கொடுத்திருக்கிறோம் என்று கூறுவார்களானால், தமிழாசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக வருவதற்கு உரிமை இருக்கவேண்டும். அல்லது தலைமை ஆசிரியராக இருப்பவர் தமிழில் ஒரு குறிப்பிட்ட அளவாவது படித்திருக்கவேண்டுமென்ற நிபந்தனை விதிக்கப்படவேண்டும்.

" அடுத்தப்படியாக ஆரம்ப கல்வியைப்பற்றி அரசாங்கத்தினுடைய கொள்கை குழப்பமாகவே இருக்கிறது. சட்டசபையில் பல கேள்விகளுக்கு கல்வி அமைச்சர் பதில் கூறும்பொழுது ஆதாரக் கல்வியே அரசாங்கத்தின் கொள்கையென குறிப்பிட்டுள்ளார்கள். இந்த கொள்கையை அமுலாக்கிக் கொண்டும் வருகிறார்கள். சாதாரண பள்ளிகளை ஆதார பள்ளியாக மாற்ற மத்திய அரசாங்கமும் 20 லட்ச ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். நம் அரசாங்கமும் பணம் ஒதுக்கியிருக்கிறது. அதே சமயத்தில் ஆரம்பக் கல்வியை பரிசீலிப்பதற்கு நியமிக்கப்பட்ட கமிட்டி ஆதாரக் கல்வி உள்பட பொதுவாக ஆரம்பக் கல்வியைப்பற்றி எல்லா பிரச்னைகளையும் ஆராயுமென்று கூறுகிறார்கள். இந்தக் கமிட்டி ஆதாரக் கல்விக்கு நேர்மாறான திட்டத்தை சமர்ப்பித்தால் அப்பொழுது அரசாங்கம் தங்களுடை ஆதாரக் கல்வி திட்டத்தை மாற்றிக்கொள்ளுமா அல்லது கமிட்டியின் சிபாரிசை எற்றுக்கொள்ளமாட்டார்களா என்பதை தெளிவாக அமைச்சர் கூறவேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

" ஆரம்பக் கல்வி எல்லாக்குழந்தைகளுக்கும் கிடைக்கவேண்டுமென்பதற்காகவும், படித்தவர்களிடையே உள்ள வேலையில்லா திண்டாட்டத்தை ஓரளவு போக்கும் நோக்கத்துடனும் மத்திய அரசாங்க உதவியுடன் நம் மாகாணத்தில் இதுவரை 2,800 ஓராசிரியர் பள்ளிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. இப்பள்ளிகளுக்கு பயிற்சி இல்லாதவர்களை ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். குறுகிய கால பயிற்சி அவர்களுக்கு கொடுக்

[Sri M. P. Subramanyam] [12th March 1955

கப்பட்டு வருகிறது. இவர்கள் நிரந்தர ஆசிரியர்களாக கருதப்படுவார்களா என்பதை அரசாங்கம் தெளிவாக்கவேண்டும். ஏனென்றால் பலர் 9 (எ) (1) போன்று தற்காலிக நியமனமா வென ஐயப்படுகிருர்கள். அதோடு நிரந்தரமான ஆசிரியர்களெனகருதப்பட்டால் அவர்களுக்குச் சம்பள உயர்வு ப்ராவிடெண்ட் பண்ட் போன்றவைகள் நியமித்த காலத்திலிருந்தே உண்டா என்பதையும் அரசாங்கம் தெளிவுபடுத்தவேண்டும். இந்த ஆசிரியர் களும் ஏற்கனவே உள்ள இரண்டு ஆண்டு பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் சமமாக கருதப்படுவார்களா என்பதையும் அறிவிக்கப்படவேண்டும்.

" இந்த ஓராசிரியர் பள்ளிகளில் சிலவற்றில் 30 முதல் 150 வரை மாணவர் கள் சேர்க்கப்பட்டிருக்கிருர்கள். குறிப்பாக சேலத்தில் மட்டும் 633 ஓராசிரியர் பள்ளிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் சில பள்ளிகளில் 100-க்கு மேல்பட்ட மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிருர்கள். இந்த 100-க்கு மேல் பட்ட பிள்ளைகள் உள்ள பள்ளிகளும், ஒரு ஆசிரியர், அதுவும் பயிற்சி இல்லாத ஆசிரியர் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிள்ளைகளை ஒரு ஆசிரியர் கட்டுப்படுத்தி வைக்க முடியாமலிருக்கும்போது பாடம் சொல்லி கொடுப்பார் என எப்படி எதிர்ப்பார்க்க முடியும் ? இதுமாதிரியான இடங் களில் பள்ளிக்கூடங்கள் இருந்தும் பயனற்றதாக இருக்கிறது. இதுமாதிரி யான நிலையை கல்வி அமைச்சர் முன்கூட்டியே தெரிந்திருக்காமல் இருந் தது மிகவும் வருந்தத்தக்கதே. இதைப்பற்றி 5, 6 மாதங்களுக்கு முன்ன தாக கல்வி அமைச்சரிடத்தில் எடுத்துக்கூறியிருக்கிறேன். விண்ணப்பமும் கொடுத்திருக்கிறேன். இதுவரை துணை ஆசிரியர்கள் நியமிக்காமலிருப்பது மிகவும் வருந்தக்கூடியதாக உள்ளது. அடுத்த கல்வி ஆண்டின் ஆரம் பத்திலாவது துணை ஆசிரியர்களை நியமிக்க அரசாங்கம் இப்பொழுதிருந்தே நடவடிக்கை யெடுக்குமென நம்புகிறேன்.

" பத்து பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இருந்த பள்ளிகளை கணக் கில் எடுத்துக்கொண்டு ஒவ்வொருவட்டாரத்திற்கும் டிப்டி இன்ஸ்பெக்டர் களை நியமித்திருக்கிருர்கள். ஆனல் கடந்த ஆண்டுகளில் அதே வட்டா ரத்தில் அநேக ஆரம்பப் பள்ளிகளும் உயர்நிலைப் பள்ளிகளும் புதிதாக திறக் கப்பட்டிருக்கின்றன. இவைகள் முழுவதையும் முன்பிருந்த டிப்டி இன்ஸ்பெக்டர்களே மேற்பார்வை செய்வதென்பது முடியாத காரியமாக இருக்கிறது. ஆண்டுகளுக்கு ஒரு முறைகூட சில பள்ளிகளை தணிக்கை செய்ய முடியாமலிருக்கிருர்கள். இப்படியிருக்கையில் எப்படி அவர்கள் தங்களுடைய கடமையை சரிவர செய்யமுடியும் ? ஆகவே ஒவ்வொரு பிர்க்காவுக்கும் ஒரு டிப்டி இன்ஸ்பெக்டர் நியமிக்கப்படவேண்டும். எப்படி அவசியமானல் உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்களின் எண்ணிக்கையை உயர்த்துகிறேமோ அதுபோல இந்த விஷயத்திலும் அரசாங்கம் நினைக்க வேண்டும். அதற்காக மிகப் பெரிய அளவில் அரசாங்கத்திற்கு செலவு ஏற்பட்டுவிடாது.

" கடைசியாக சேலத்திற்கு ஒரு கல்லூரி புதிதாக ஆரம்பிக்கப்படவேண் டியதைப்பற்றிச் சொல்லி முடித்துவிட விரும்புகிறேன். சேலத்திலிருக் கும் இப்பொழுதுள்ள கல்லூரி சேலம் நகராண்மைக் கழகத்தாரால் நடத் தப்படுகிறது. சேலம் நகரத்திலுள்ள சுமார் 10, 11 உயர்நிலைப் பள்ளி களில் வரும் மாணவர்களுக்கே கல்லூரியில் இடம் கொடுக்க முடியவில்லை. சேலம் மாவட்டத்தில் மற்ற பகுதிகளிலுள்ள சுமார், 60, 70 பள்ளிகளி ருந்துவரும் மாணவர்களுக்கு இந்து முனிசிபல் கல்லூரியில் இடம் கிடைப் பதே இல்லை. ஆதலால் மற்றும் ஒரு கல்லூரி சேலத்தில் ஆரம்பிக்க அரசாங்கம் முன்வரவேண்டுமென்று பன்முறை வேண்டியும் நிராகரித்து விட்டார்கள். சேலம் ஜில்லா போர்டில் உள்ள ரெயில்வே ரிசர்வ்நிதி யில் சுமார் 10, 15 லட்சம் ரூபாய் இருக்கிறது. இவைகளிலிருந்து எடுத்து கல்லூரி ஏற்படுத்த அரசாங்கம் ஒப்புதல் தர மறுக்கிறது. ஐந்து லட்ச ரூபாய் security- ஆக கட்டமட்டும் ஒப்புக்கொள்வதாக கூறுகிருர்கள். இந்த விஷயத்தில் அரசாங்கம் தங்கள் கொள்கையை தளர்த்தி அங்கு கல்லூரியை ஏற்படுத்த அனுதாபத்துடன் கவனிக்கவேண்டுமென்று கூறி முடித்துக் கொள்கிறேன்."

12th March 1955]

Sri R. KRISHNASWAMY NAIDU:—"கனம் உப தலைவர் அவர்களே, கனம் கல்வி மந்திரி அவர்கள் கொண்டுவந்திருக்கும் கல்வி மானிய பிரேரேபணையை நான் ஆதரிக்கிறேன். இவ்வருஷம் சென்ற வருஷத்தை விட கல்விக்காக அதிகத் தொகையை ஒதுக்கி இருப்பதற்காக, அரசாங்கத்தை நான் பாராட்டுகிறேன். தவிர இந்த சந்தர்ப்பத்தில் ஒரு சில வார்த்தைகள் சொல்லவும் ஆசைப்படுகிறேன். ஆதாரக் கல்விப் பள்ளிகளை, இந்த மாகாணத்தில் விரைவில் அதிகரிக்கச் செய்யவேண்டும். சில அங்கத்தினர்கள் கூட அவசரப்பட்டு, ஆதாரப்பள்ளிகளை குறைகூறி அபிப்பிராயம் தெரிவித்துவிட்டார்கள் என்று நினைக்கிறேன். ஒரு அங்கத்தினர் இருக்கும் **area** வில் ஆதாரக் கல்வி பள்ளி வாசனையே இல்லாததால், அவர் ஆதாரக் கல்வியை குறைகூறிவிட்டார். இன்னொரு அங்கத்தினருக்கு ஆதாரக் கல்வி விஷயமாக, அதிகமாக தெரிந்துகொள்ளவேண்டுமென்று ஆர்வம் இல்லாததால், அதை சிலாகித்துப் பேசவில்லை. அவர்கள், வேண்டுமென்றால் கல்லுப்பட்டியிலுள்ள ஆஸ்ரமத்திற்குப் போகட்டும். அல்லது என் கிராமத்தில் நடக்கும் ஆதாரக் கல்வி பள்ளியைப் போய்ப் பார்க்கட்டும். அங்கு சிறிய மாணவர்களுக்கு எவ்வளவு பொது அறிவு இவ்வாதாரக் கல்வியினால் ஏற்பட்டிருக்கிறது என்பதை சுலபமாகத் தெரிந்துகொள்ளலாம். சாதாரண ஆரம்பக் பள்ளிகளிலுள்ள மாணவர்கள் கற்றிருப்பதற்கும், இவ்வாதாரக் கல்வி பள்ளிகளிலுள்ள மாணவர்கள் கற்றிருப்பதற்கும் உள்ள வித்தியாசத்தை நன்கறியலாம். அப்போதுதான், இவர்களுக்குள்ள மேல்நாட்டு கல்வி முறையின் மேலுள்ள மோகம் நீங்கி, கண்கள் திறக்கப்படும். அதிக பொது அறிவு உள்ளவர்கள் ஆதாரக் கல்வி பயின்ற மாணவர்கள்தான் என்பதை உணரலாம். 1–15 p.m.

"ஆதாரப் பயிற்சி பள்ளியில் டிரெயினிங் ஆகும் ஆசிரியர்களுக்கு எட்டாவது வரை படிப்புக்கு சர்ட்டிபிகேட் தேவையில்லை என்று சிலர் சொன்னார்கள். நான் சொல்லுகிறேன், பல வருஷங்களாக, ஆதாரக் கல்விப் பயிற்சிப் பள்ளிகளுக்கு மாணவர்களைப் பொறுக்கும் கமிட்டியில் அங்கத்தினராக இருக்கிறேன். எட்டாவது வரை படித்தவர்களுடைய கல்வி, பொது அறிவு எப்படி இருக்கிறதென்பது எனக்குத் தெரியும். இந்த எட்டாவது படித்தும், அவர் படித்த தாலுகாவைப்பற்றிய விவரங்களையே தெரியாமல் இருக்கிறார்கள். **Intermediate**, ஒரு ஜில்லாவிலுள்ள காலேஜில் படித்த மாணவனுக்கு, அந்த ஜில்லாவிலுள்ள தாலூக்காக்கள் எத்தனையென்று தெரியவில்லை. அவ்வளவு பொது அறிவு தேர்ச்சிதான் இப்போது படித்தவர்களுக்கு இருக்கிறது. கிராமங்களில் ஆரம்ப வகுப்புகளில் பயின்றவர்களுக்கு, கல்வித் தரம் குறைந்ததாக இருக்கிறது. ஆகையினாலே, ஹைஸ்கூல் படிப்புக்கு சமமாக அல்லது **Senior Basic** எட்டாவது வகுப்பு வரை படித்தவர்கள்தான், ஆதாரக்கல்வி பள்ளி ஆசிரியர்களாக வர, அருகதை உள்ளவர்கள் என்று சர்க்கார் நிர்ணயிப்பது நல்லது. ஆசிரியர்கள் கல்வித் தரம் குறைவாக இருப்பதால், அதன் காரணமாகவே, ஆதாரக் கல்விப் பயிற்சிப் பள்ளிகளில், பயனுவதற்கு லாயக்கில்லாமல் இருக்கிறார்கள். மகாத்மா காந்தியடிகள், ஜாகீர் உசேன் போன்றவர்கள் ஆதாரக் கல்வியை ஆதரித்து சொல்லிவிட்டார்கள் என்பதற்காக ஆதாரக் கல்வித் திட்டத்தை ஆதரிக்கவேண்டுமென்று சொல்லவில்லை. அதைப் பற்றி எழுதப்பட்டுள்ள புஸ்தகங்களை படிக்கவேண்டும். எவ்வாறு பாடங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன, எவ்வாறு மாணவர்கள் பொது அறிவு பெறுகிறார்கள் என்பதைப்பற்றி எல்லாம் தெரியவேண்டும். ஏதாவது அக்கல்வியைப்பற்றி சொன்னால், ஆராய்ந்து பார்க்கவேண்டும். மாணவர்கள் மாணவிகள், எப்படி தாங்கள் இருக்குமிடங்களை சுத்தமாக வைத்திருக்கிறார்கள் என்பதை அறியலாம். சிறு வயது முதலே, அவர்கள், எப்படி பொறுப்புடன் நடந்துகொள்ளவேண்டும், சுத்தமாக எப்படி இருக்கவேண்டும் என்ற பொது அறிவைப்பற்றி, தெரிந்துகொள்ளும் முறையில் அப்பள்ளிகளில் சொல்லிக்கொடுக்கிறார்கள். ஒரு சட்ட சபை மெம்பரோ, மந்திரியோ, ஆதாரக் கல்வி பள்ளிகளுக்குச் சென்று, மாணவர்களை கேள்விகள் கேட்டால், எவ்வளவு புத்திசாலித்தனமாக, பதில் சொல்லுகிறார்கள், பேசுகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளலாம். ஆதாரக் கல்விவாசனை அறியாத ஒரு அங்கத்தினர் சொன்னார்; மாணவர்களை

